Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE ELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 347
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் தை 14 ஜுலை 29 புதன்கிழமை (27-1-71)

நவநாகரீக நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
ஹரன் ஜுவல்லர்ஸ்
போன் 444
தந்தி 'இரத்தினம்ஸ்'
50. கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

# "மக்கள் உரிமைகளுக்கு பெரும் ஆபத்து ஏற்படும்"

## அடிப்படைத் தீர்மானங்கள் பற்றி காங்கிரஸ் செயலாளர்

-- நமது நிருபர் யோகி --

யாழ்ப்பாணம், புதன் சோஷலிசம் என்ற போர்வையில் கம்யூனிஸ்ட் கொள்கைகள் அரசியல்சாசனம்பற்றி வெளியிடப்பட்டுள்ள அடிப்படை தீர்மானங்களில் இடம் பெற்றுள்ளது ஜனநாயகத்திற்கு முழுக்க முழுக்க முரண்பாடாகவுள்ளது. தேசிய அடிப்படையில் தமிழ்க் காங்கிரஸின் கொள்கைகளுக்கு இத்தீர்மானங்கள் முரணாகஇருக்கின்றன. தமிழ் காங்கிரஸ் இதற்கு திருத்தம் கொண்டுவரவிருக்கிறது.

தமிழ் காங்கிரஸ் நிர்வாக செயலாளர் திரு. சி. சங்கரப்பிள்ளை நேற்று என்னிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார். தமிழ்க் காங்கிரஸ் கமிட்டி சில தினங்களில்கூடி இந்த அடிப்படை தீர்மானங்கள், நமது சமுதாயத்தைப் பொறுத்தவரை எவ்வளவு தூரம் தீங்கு விளைவிக்ககூடியதென்பதை ஆராயுமென்றும் அவர் தெரிவித்தார்.

வேலூர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும்தமிழ் காங்கிரஸ்தலைவருக்கு அடிப்படைத் தீர்மானங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரி

(8-ம் பக்கம் பார்க்க)

## தீ விபத்தில் சிக்கிய சிறுவர்களில் ஒருவர் பலி

யாழ்ப்பாணம், புதன் நெடுந்தீவில் நடந்த தீ விபத்தில் சிக்கி படுகாயங்களுடன் யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இரு சிறுவர்களில் ஒருவர் நேற்று மரணமானார்.

ஐந்துவயதானதேவராசா என்றசிறுவனின்மரண விசாரணையின் போதுமேற்கண்ட விபரம் தெரிவிக்கப்பட்டது. மரணவிசாரணை அதிகாரி திரு. என் இராசநாயகம், மரணவிசாரணை நடத்தினார்.

காலஞ்சென்ற தேவராசாவுடன் மற்றும் இரு சகோதரர்களும் நித்திரைசெய்த போது, தாயார் ஒருபோர்வையை அவர்கள்மீது விரித்ததாகவும், கால்பக்கத்திலிருந்த போத்தல்விளக்கு தற்செயலாக தட்டுப்பட்டதால் தீவிபத்து ஏற்பட்டதாகவும் விசாரணையில்கூறப்பட்டது.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட மற்ற சிறுவனை ஜெசுராசா (11வயது) சிகிச்சைபெற்று வருகிறார். விபத்தினால் ஏற்பட்டமரணம்என மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

## கோடீஸ்வரன் வழக்கு 19-ம் திகதி மறு விசாரணை

### ஐந்து நீதியரசர்கள் விசாரிப்பார்கள்

கொழும்பு, செவ். கோடீஸ்வரன் வழக்கு ஐந்து நீதியரசர்கள் முன்னிலையில் மார்ச் மாதம் 19-ம் தேதி கொழும்பில் விசாரணை செய்யப்படவிருக்கிறது.

'அரசியல் அமைப்பு சட்டத்தின் 29-ம் பிரிவு தனிச் சிங்களசட்டத்திற்கு முரணானதா? இல்லையா?' என்பது பற்றிய சட்டவாதம் விசாரணையின் போது நடைபெறவிருக்கிறது. இப்பிரச்னை சம்பந்தமாக நீதியரசர்கள் தீர்ப்பளிப்பார்கள்.

கோடீஸ்வரன் வழக்கு மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஒ. எல். டி. கிரெஸ்டர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு மனுதாருக்கு சாதகமாக தீர்ப்பளிக்கப்பட்டது பின் சுப்பிறீம்கோர்டில் தீர்ப்பை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட அப்பீல் விசாரணையில் மனுதாருக்கு பாதகமாக தீர்ப்பளிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து மனுதாரரான திரு கோடீஸ்வரன் பிறிவுக் கவுன்சிலுக்கு அப்பீல் செய்தார் பிரிவுக் கவுன்சிலின் விசாரணையின் பின் அரசியல்அமைப்பு சட்டத்தின்29-ம் பிரிவுக்கு தனிச் சிங்கள சட்டம்முரணானதா? என்பது பற்றி இலங்கையில் தீர்வு காணுமாறு தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

சிங்கள நியந்தனை காரணமாக சம்பள உயர்வு நிறுத்திவைக்கப்பட்டதை ஆட்சேபித்து திரு. கோடீஸ்வரன் இந்தவழக்கை தாக்கல் செய்திருந்தார்.

இலங்கையில்

## குடும்பத் திட்டம் பற்றி ஐ. நா. குழு ஆராயும்

கோட்டை, செவ்வாய் இலங்கைக் குடும்பக்கட்டுப்பாட்டுத்திட்டம் சம்பந்தமாக ஐ. நா. குழுவொன்று ஆராயவிருக்கின்றது.

இலங்கைக் குடும்பக்கட்டுப்பாடுதிட்டங்கள் சம்பந்தமாக விரிவானமுறையில் இந்தக்குழுவினர் ஆராய்ந்து அறிக்கை தயாரிப்பார்கள்.

ஐ. நா. ஸ்தாபனத்தின் உத்தரவின் மீது இக்குழுவினர் மதிப்பீட்டு அறிக்கையொன்றையும் தயாரிப்பார்கள்.

இக்குழுவில் ஏழுபேர் இருப்பார்கள்.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் இங்கு ஒரு குறிப்பிட்ட சமூகத்தினருக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டு வந்ததாகக் கூறப்பட்டது பற்றிய உண்மை இந்த ஆய்வின் மூலம் வெளிச்சமாகுமா என்றும் கேட்கப்படுகின்றது.

கிரிக்கட் டெஸ்ட்

## வெற்றி தோல்வி இல்லை

சிட்னி, ஜனவரி 26 மெல்போனில் ஆவுஸ்திரேலியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையில் நடைபெற்ற 5-வது கிரிக்கட் டெஸ்ட் வெற்றி தோல்வியின்றிமுடிவடைந்தது அவுஸ்திரேலியா தனது இரண்டாவது இன்னிங்ஸில் 4 விக்கட்டுகளை இழந்து 179 ஓட்டங்கள் எடுத்ததும் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. 240 நிமிடங்களில் 270 ஓட்டங்கள் எடுக்க வேண்டிய நிலையில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து கோஷ்டி இரண்டாவது இன்னிங்ஸில் விக்கட் இழப்பின்றி 151 ஓட்டங்கள் எடுத்த போது ஆட்டம் முடிவடைந்தது.

## மரவரி முறையை நீக்க கோரிக்கை

### நிதி மந்திரியிடம் மகஜர்

யாழ்ப்பாணம், புதன் வடஇலங்கையில் இருக்கும் மரவரி முறையில் சில ஊழல்கள் இருப்பதால் அவற்றை உடனடியாக நீக்குதல் வேண்டும்

வடஇலங்கை கள் இறக்கும் தொழிலாளர் சங்க உறுப்பினர்களும் நியமன எம். பி.யும், சங்க பொதுக்காரியதரிசியுமான திரு எம் சி சுப்பிரமணியம் தலைமையில் நிதிமந்திரி டாக்டர் என் எம் பெரேராவைப் பேட்டிகண்ட பொழுது சமர்ப்பித்துள்ள மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேற்படி சங்கம் சிபார்சு செய்யும் தொழிலாளர்களுக்கே லைசென்ஸ் வழங்கப்பட வேண்டும் என்றும் பர்மிட் தாரனல்லை விஸ்தரிக்கப்பட வேண்டுமென்றும் கருப்பநீர் சம்பந்தமான சட்டத்தை முற்றாக நீக்கி இலவசமாக கருப்பநீரை உற்பத்திசெய்யக் கூடியதாக வழிவகை செய்யவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்

(8-ம் பக்கம் பார்க்க)

பாக். எதிர் நடவடிக்கை

## இந்திய அதிகாரிக்கு வெளியேற உத்தரவு

ராவல்பிண்டி ஜன 26 பாகிஸ்தானிலுள்ள இந்திய தூதரகத்தின் முதல் காரியதரிசியை நாட்டை விட்டு வெளியேறும்படி பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டிருக்கின்றது.

புதுடில்லியிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்திலிருந்து முதல்காரியதரிசியை இந்திய அரசுவெளியேற்றியதற்கு எதிர்நடவடிக்கையாக பாகிஸ்தான் இந்த நடவடிக்கையை எடுத்திருக்கின்றது

பாகிஸ்தானிலுள்ள இந்திய தூதரகத்தின் முதல்காரியதரிசி திரு ஜோஷியை 48 மணி நேரத்துக்குள் வெளியேறும்படி பாகிஸ்தான அரசு உத்தரவிட்டுள்ளது

## வரிவிளம்பரம்

விற்பனைக்கு
6 மாபிள்கல்லுமேசைகள், 24 இரும்புக் கதிரைகள் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு வே. ஞானி, அச்சுவேலி (லிபேர்ட்டி தியேட்டர் முன்) 2450

காங்கேசன்துறை சந்திக்கு அண்மையில் யாழ்ப்பாண வீதியில் இருக்கும் 22-ம் இலக்க காணி, வீடு, கிணறு, மலகூடம் ஆகியவற்றுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு No. 6, சங்கிலியன்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 2678

நல்லூர் கோவிலுக்கு நல்லூர் பயிற்சிக்கல்லூரி, கச்சேரி முதலியனவற்றுக்கு அண்மையில் தனி அறைகள் வாடகைக்கு விடப்படும். தேவைப்படுவோர் No. 24, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 2449

**வெலிங்டன் சினிமா**
யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள்
எஸ்.எஸ்.ஆர். - தேவிகா
நடித்த
**மறக்கமுடியுமா?**

## கேள்விப்பத்திர அறிவித்தல்

### 40,000 சாக்குகளும் 5 அந்தர் சணலும் தேவை

பின்குறிப்பிடும் முறையில் 40,000 வெற்றுச் சாக்குகள் எமக்குத் தேவைப்படுகின்றன. 31-1-71-க்குப் பிந்தாமல் பதிவுத்தபால் மூலம் எமக்கு இத்தொகைச் சாக்குகளை விலைக்குத் தரக்கூடியவர்கள் விலை விபரங்களுடன் எழுத்தில் தயவுசெய்து மனுச் செய்யவும். சிறுதேசை 3 புசல் சாக்குகள் தரக்கூடியதாக இருந்தால் மிக நன்று. 2 1/2 புசல் சாக்குகளும் வாங்கப்படும். தரத்துக்குரிய விலைவிபரங்களைத் தருக. பதிவுத் தபாலின்மேல் இடதுபக்க மூலையில் சாக்குக் கேள்விப்பத்திரமெனக் குறிப்பிடவேண்டும். சணல் விலைவிபரம் அந்தரொன்றுக்குத் தரவும்.

தா. இராசரத்தினம்,
தலைவர்,
வவுனியா தெற்கு தமிழ்ப் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசம்,
வவுனியா.

2744 24-1-71


நிதி அமைச்சர் தொடக்கி வைத்த போட்டி

# மகாஜனு, கொக்குவில் வெற்றி பெற்றன

[ நமது நிருபர் 'தேவா' ]

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணப் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தினால் அகில இலங்கைப் பாடசாலை சாம்பியன் கோஷ்டிகளிடையே முதன் முறையாக நடாத்தப்படும், 3 நாள் உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டி, நிதிஅமைச்சர் கலாநிதி என். எம். பெரேராவினால் நேற்று முன்தினம் தொடக்கி வைக்கப்பட்டது.

போட்டிகள் ஆரம்பமாவதற்கு முன், இப்போட்டியில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம் வந்துள்ள, சகல மாவட்டப் பாடசாலைகளின் சாம்பியன் கோஷ்டிகளையும், யாழ்ப்பாணப் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் தலைவர் திரு. ஈ. சபாலிங்கம், கலாநிதி என். எம். பெரேராவுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

## மகாஜனு வெற்றி

தெல்லிப்பளை மகாஜனுக் கல்லூரிக்கும், பதுளை தர்மதூதக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில், மகாஜனுக் கல்லூரி வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியின், ஆரம்பத்திலிருந்து முடிவடையும் வரை தெல்லிப்பளை கோஷ்டியினர் சிறப்பாக விளையாடினர். இவர்கள் இடைவேளைக்கு முன்பாகவே, 'பெனல்டி' மூலம் ஒரு கோலைப் போட்டனர். இக்கோலை வீரர் மோகன்ராம் அடித்தார்.

இடைவேளையின் பின், மகாஜனுக் கல்லூரியினரின் ஆட்டத்தில் வேகம்அதிகரித்துக்காணப்பட்டது. இதனால் இவர்கள் மேலும் இரு கோல்களை அடுத்தடுத்துப் போட்டனர். இக் கோல்களை வி. சிவானந்தராசாவும், ஆர். ஆர். டயாஹனும் முறையே போட்டனர். பதுளைக் கோஷ்டியின் கோல் காப்பு வீரரின் அசிரத்தையே இக் கோஷ்டியின் தோல்விக்குக் காரணமென ரசிகர்கள் பேசிக் கொண்டனர்.

ஆட்டம் முடிவடையும் போது, மகாஜனுக் கல்லூரியினர் 3—0 கோல்களினால் எதிர்க் கோஷ்டியினரை வெற்றியீட்டி, அரை இறுதியாட்டத்துக்கு விளையாடுவதற்கு தகுதி பெற்றனர்.

இப்போட்டிக்கு திரு. ஈ. கே. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## கொக்குவில் வெற்றி

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும், திருக்கோணமலை சென். ஜோசப் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற ஆட்டத்தில் கொக்குவில் இந்து வெற்றி பெற்றது.

இந்த இரு கோஷ்டிகளின் ஆட்டமும், பார்வையாளரிடை உற்சாகத்தை ஏற்படுத்தியது. ஆட்டம் ஆரம்பமாகி 15 நிமிடங்களின் பின் திருமலைச் சோஷ்டியின் வலதுகரை முன்னணி வீரர் ஏபுறுரசாக் மின்னல் வேகத்தில் ஒரு கோலைப் போட்டார். இக்கோஷ்டியின் இடதுகரை முன்னணி வீரர் கிளமன்டி சில்வாவின் ஆட்டம் ரசிப்பாகக் காணப்பட்டது. திருமலைக் கோஷ்டியினர் இடைவேளைவரை சிறப்பாக விளையாடிய போதிலும், கொக்குவில் கோஷ்டியினர் 'பெனல்டி' மூலம் ஒரு கோலைப் போட்டனர். இக்கோலை வீரர் மனோகரன் அடித்தார். இடைவேளையின் போது இரு கோஷ்டியினரும் தலா 1—1 கோலைப் பெற்றிருந்தனர்.

இடைவேளையின் பின்இரு கோஷ்டியினரும் மிகவும் பலமாகவே மோதிக் கொண்டனர். இக் கட்டத்தில் கொக்குவில் கோஷ்டியினரின் ஆட்டம் சிறப்பாகக் காணப்பட்ட போதிலும் கோல்கள் போடும் பல இலகுவான கட்டங்களை நழுவ விட்டு விட்டனர். ஈற்றில் இக் கோஷ்டியின் முன்னணி வீரர் ப. புவனேசன் ஒரு கோலைப் போட்டார். ஆட்ட முடிவில் கொக்குவில் கோஷ்டியினர் 2—1 கோல்களால் திருமலைக் கோஷ்டியைத் தோற்கடித்து, அரை இறுதி ஆட்டத்தில் விளையாடுவதற்கு தகுதி பெற்றனர்.

இப் போட்டிக்கு திரு. கிருஷ்ணன் மத்தியஸ்தம் வகித்தார். இந்தப் போட்டிகள் அனைத்தும், யாழ். விளையாட்டரங்கிலே நடைபெறுகின்றன.

— —

## சுவைமிக்க போட்டி

மாவிட்டபுரம், செவ்

கொழும்பு சாஹிராக் கல்லூரியும் தெல்லிப்பழை மகாஜனுக் கல்லூரி பழைய மாணவர் தெரிவுக்கோஷ்டியும் மோதிய ருசிகரமான உதைபந்தாட்டப் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

தெல்லிப்பழை மகாஜனுக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடந்த இப் போட்டியை பார்ப்பதற்காக ஏராளமான ரசிகர்கள் கூடியிருந்தனர்.

ஆரம்பமுதல் இறுதிவரை போட்டி விறுவிறுப்பாக இருந்தது. இரு தரப்பினரும் விட்டுக்கொடுக்காது ஆடி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றனர். இறுதிவரை இருதரப்பினரும் சிறப்பாக ஆடியதில்போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

திரு எஸ் போகரத்தினம் மத்தியஸ்தம் வகித்தார். மகாஜனுக்கல்லூரி முன்னாள் அதிபர் திரு தி தி ஜெயரத்தினம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டார்.

— —

## வல்வைக் கிளை தீர்மானம்

வல்வெட்டித்துறை, செவ்

வல்வெட்டித்துறை சமசமாஜக்கட்சிக் கிளைக் கூட்டம் தலைவர் திரு. ஆ. ந... வேலாயுதம் தலைமையில் நடைபெற்றது.

ஆரம்ப ஐக்கிய பண்டசாலை ஒன்றை வல்வெட்டித்துறை நகரசபைக்குள் அமைக்கவேண்டும் என்றும், வல்வை சிதம்பராக்கல்லூரிக்கு நிரந்தர அதிபர் ஒருவரை நியமிக்கவேண்டும் என்றும் கோரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.


**ராணி சினிமா** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜிகணேஷன் -சரோஜாதேவி
நடித்த
**அன்பளிப்பு**

**வின்ஸர்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேசன் - சௌகார் ஜானகி
நடித்த
**சக்கரம்**

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயா நாட்கள் 4 காட்சிகள்
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (கொழும்பு)



சிவாஜி - காஞ்சனா
எம். என். நம்பியார்
நாகேஷ் முத்துராமன்
இன்னும் பலர் நடித்த
ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்
**சிவந்த மண்**

**மைலன்** (கொழும்பு)
தினசரி 2-00, 6-00 9-00
சிவாஜி - எஸ். எஸ். ஆர்.
நடித்த
**பெற்றமனம்**

**ஸ்ரீகாலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
காந்தராவ் — ராஜ்ஸ்ரீ
நடித்த
மன்னனைக் காத்த மாவீரன்

**RAJAH**
(Jafina)
Daily at 4-45, 7, 9-45p.m.
Omer Shariff
in
MAYERLING
(colour)

**REGAL** Jaffna
Daily 3 shows
Poya days 4 shows
Peter Sellers,
Lee Remick
in
THE PARTY
(Techni color)

**MANOHARA**
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p.m
poya days 4 shows
Christopher Lee
in
THE DEVIL'S BRIDE
(Colour)


## திருமண அழைப்பு

### சோமா -- ஜெகா

துன்னாலை திருமதி க. கந்தையா அவர்களும், திரு. வ. கந்தையா J. P. (இளைப்பாறிய சுங்க அதிகாரி) அவர்களும் யாழ்ப்பாண நாச்சிமார் கோவிலடி திருமதி ம. வேலுப்பிள்ளை அவர்களும், திரு. க. வேலுப்பிள்ளை (இளைப்பாறிய மராமத்து இலாகா ஓவசியர்) அவர்களும் - தங்கள் பிள்ளைகள்

**செல்வன் Dr. க. சோமசுந்தரராசா F. R. C. S.**
[கிழ் பர்மிங்காம் மருத்துவமனை, பர்மிங்காம்]க்கும்

**செல்வி Dr. வே. ஜெகதீஸ்வரி**
[யாழ். அரசினர் மருத்துவமனை, யாழ்ப்பாணம்]க்கும்

மாசித்திங்கள் முதலாம் நாள் மாலை 6 மணிக்கு மேல் 7 மணிக்குள் வரும் சுபமுகூர்த்தத்தில் மணமகள் இல்லத்தில் திருமணஞ் செய்ய நிச்சயித்திருப்பதால்- அத்தருணம் நண்பர்களும் உறவினர்களும் எங்கள் இல்லங்களுக்கு வருகை தந்து மணமக்களை ஆசிர்வதித்தேகுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

வ. கந்தையா தம்பதிகள்
(இளைப்பாறிய சுங்க அதிகாரி)
'புஷ்பவாசா'
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

க. வேலுப்பிள்ளை தம்பதிகள்
(இளைப்பாறிய மராமத்து இலாகா ஓவசியர்)
31/9, நாச்சிமார் கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

# உகண்டாவில் ராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது

## அதிபர் இல்லாத சமயம் திடீர் புரட்சி

நைரோபி, ஜன:26

**உகண்டாவில் திடீர்ப் புரட்சி நடத்தி ஆட்சியை இராணுவம் கைப்பற்றியுள்ளது;**

**உகண்டா ஜனாதிபதி மில்டன் ஒபட்டே வெளிநாட்டில் இருக்கையில் இந்தப் புரட்சி நடைபெற்றுள்ளது.**

**கடைசியாகக் கிடைத்த தகவல் ஒன்றின்படி உகண்டா தலைநகரான கம்பாலாவில் தொடர்ந்து சண்டை நடந்துகொண்டிருக்கிறதாம்**

உகண்டா ஜனாதிபதி மில்டன் ஒபட்டே சிங்கப்பூரில் நடைபெற்ற காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு நாடு திரும்பிக் கொண்டிருக்கும்போது இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அமீம் புரட்சி நடத்தி ஆட்சியைக் கைப்பற்றினார். ஆட்சி மாறுவதற்கு முன்னர் அதிபர் ஒபட்டேக்கு விசுவாசம் உள்ள படைகளுக்கும் புரட்சியாளர்களுக்குமிடையில் கடுமையான சண்டை நடைபெற்றது. இந்தச் சண்டையில் பலர் பலியாகியுள்ளதாகவும், ஏராளமானவர்கள் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

வெகு விரைவிலேயே உண்மையும் நீதியுமாகப் பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டு, மக்கள் பிரதிநிதிகளிடம் ஆட்சியை பொறுப்பளிக்கப்போவதாக மேஜர் ஜெனரல் அமீம் அறிவித்துள்ளார். அதிபர் ஒபட்டே நாட்டுக்குத் திரும்பிவரலாம் என்றும், கைதுசெய்யப்பட்டிருப்பவர்கள் விடுதலைசெய்யப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில மேல்மட்டத்தில் ஊழல்கள் மலிந்து போனதாகவும், நிர்வாகச் சீர்கேடுகள் நிலவுவதாகவும் ஆட்சியைக் கையேற்பதற்கு இதுவே முக்கிய காரணம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிபர் ஒபட்டே இப்பொழுது நைரோபியில் இருக்கிறார். கென்யா அதிபருடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக அவர் நைரோபிக்கு வந்தார்.

உகண்டாவில் ஆட்சியை இராணுவம் கைப்பற்றியுள்ளது பற்றி அவர் எதுவும் கூற மறுத்துவிட்டார்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் அதிபர் ஒபட்டேயும் இவ்வாறே புரட்சி மூலம் பதவிக்கு வந்தார்.

மத்திய ஆபிரிக்காவில் உகண்டா தேசம் இருக்கின்றது. காமன்வெல்த் நாடுகளிடையே கோப்பி அதிகமாகப் பயிரிடப்படும் நாடு உகண்டாவாகும். 1962ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் உகண்டா பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றது. காமன்வெல்த்தில் ஐ. நா. சபையிலும் உகண்டா அங்கத்துவம் வகிக்கின்றது

1966ல் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பின்போது பிரதமமந்திரியாக இருந்த மில்டன் ஒபட்டே ஆட்சியின் முழு அதிகாரத்தையும் தம் கையில் எடுத்துக்கொண்டார். முன்னர் மன்னராகவும், பின்னர் அதிபராகவுமிருந்த எட்வர்ட் முட்டேஸாவை ஒபட்டே பதவியிலிருந்து வெளியேற்றினார்.

1967ல் புதிய அரசியல் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. இதன்படி மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தேசிய சபையொன்றுக்கும் அதிபர் ஒருவருக்கும் வழி செய்யப்பட்டது.

---

மேற்காசிய அமைதிக்கு:

## ஜோர்டான் கொடுத்துள்ள 7 அம்சத் திட்டம்

அம்மான் ஜன. 26

மேற்காசிய அமைதிக்கென ஜோர்டான் ஏழு அம்சங்கள் கொண்ட திட்டம் ஒன்றினை ஐ. நா. அமைதித் தூதுவருக்கு அனுப்பியிருக்கின்றது.

இஸ்ரேலியர் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள பகுதியிலிருந்து முற்றாக வெளியேறியாக வேண்டும் என்று ஜோர்டான் வலியுறுத்தியிருக்கின்றது

ஜோர்டானின் இத் திட்டத்தின் முழுவிபரமும் இஸ்ரேல் மந்திரிசபைக்குகிடைத்திருப்பதாகவும் அவர்கள் இப்பொழுது இதுபற்றி விரிவாக ஆராய்ந்து வருகிறார்கள் என்றும் கூறப்படுகின்றது. மேற்காசிய அமைதிக்கென ஏற்கனவே இஸ்ரேல் ஒருதிட்டத்தைச் சமர்ப்பித்திருந்ததும், அதற்குமாறாக ஐக்கிய அரபுக் குடியரசு மாற்றத்திட்டம் ஒன்றினைசமர்ப்பித்ததும் தெரிந்ததே.

### அரபாத்மீது குற்றச்சாட்டு

பாலஸ்தீன் கொமாண்டோ அணிகளின் தலைவர் யாஸிர் அரபாத் அரபுகளுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்த முனைவதாக ஜோர்டான் குற்றஞ்சாட்டியிருக்கின்றது.

ஜோர்டானைப்பற்றி பொய்ப்பிரசாரங்களை அரபாத் நடத்திவருவதாகவும், ஜோர்டான் குற்றஞ்சாட்டியிருக்கின்றது.

---

## 18 ஆண்டுகளின்பின் ரெலிபோன் தொடர்பு

பேர்லின், ஜன. 26

18 ஆண்டுகளின் பின்னர் மேற்கு ஜெர்மனிக்கும், கிழக்கு ஜெர்மனிக்குமிடையில் இன்று ரெலிபோன் தொடர்பு ஏற்படுத்தப்பட்டது.

---

## புராதன அறுவைச் சிகிச்சை

அல்மா-அதா, ஜன. 26

இன்றைய கஜாகிஸ்தான் உள்ள மத்திய ஆசியாவில் 23 நூற்றுண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த அறுவைச்சிகிச்சை வைத்தியர் ஒருவர் ஓர் இளம் மாதின் இடது காலை துண்டித்து வெற்றிகரமாக சிகிச்சை செய்தார்.

துண்டிக்கப்பட்ட காலுக்குப் பதிலாக செயற்கைக் காலையும் பொருத்தினர்.

இதை கஜாகிஸ்தான் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களும், அறுவைச் சிகிச்சை நிபுணர்களும் கண்டு பிடித்துள்ளனர்.

மத்திய கஜாகிஸ்தானிலுள்ள பண்டைய சவக்காடொன்றில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்புக்கூடொன்றிலிருந்தே இது தெரியவந்தது

எக்ஸ்ரே மூலம் இந்த பரிசிலனை நடத்தப்பட்டு, பண்டைய வைத்திய மேதையின் அறுவைச்சிகிச்சை வெற்றிகரமாக முடிவுற்றது ஊர்ஜிதப்படுத்தப்பட்டது.

அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் பலலாண்டு காலம் நோயாளி சுகஜீவியாக வாழ்ந்ததும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

பாவிக்கப்பட்ட செயற்கைக் கால் ஆட்டு எலும்பால் செய்யப்பட்டதெனத் தெரியப்படுகிறது.

---

## ரஷ்ய ஜனத்தொகை

மாஸ்கோ, ஜன. 26

சோவியத்யூனியன் 1970ம் ஆண்டுக்கான குடிசன மதிப்பு எடுத்தலை முடித்துள்ளது.

அன்னை அரசி (1738) காலத்தில் ரஷ்ய நாட்டில் நடத்தப்பட்ட குடிசன மதிப்புடன் ஒப்பிடும்போது தகவல்கள் சுவாரஸ்யமாய் உள்ளன,

அன்று ரஷ்ய சாம்ராஜ்யத்தின் மொத்த குடிமக்கள் தொகை 10,893,188 ஆகஇருந்தது. இவர்களில் 80 லட்சம் பேர் விவசாயிகளாகும். பெண்களைவிட ஆண்கள் 240,000 அதிமாக இருந்தனர்

அன்றுசெயின்ட் பீட்டர்ஸ்பேர்க்கோ அல்லது மாஸ்கோவோ பெரும் நகரங்களாகத்திகழவில்லை பீட்டர்ஸ்பேர்க் குடிமக்கள் தொகை 68,000ஆக மாத்திரமிருந்தது. ஆனால் அவை தீர் 74,000; கிவின்-77,000 பெரஸ்லாவ்ஸ்-ஸலெஸ்கி 85,000. லலொக்டா 92,000 பேரை பெற்றிருந்தன. பழைய தலைநகரமான மாஸ்கோ, புதிய தலைநகரான பீட்டர்ஸ்பேர்கைவிட அதிகமான ஜனத்தொகையைப்பெற்றிருந்தது ஆனால் ரஷ்ய நகரங்களில் நாலாவது ஸ்தானத்தை மாத்திரமே மாஸ்கோ வகித்தது. ஆனல் குருமார்களின் தொகையைப் பொறுத்தமட்டில் தலைமை ஸ்தானத்தை வகித்தது.

---

## மின்சாரம் வழங்க நடவடிக்கை

மாவிட்டபுரம், செவ்பலாலி, வசாவிளான், ஒட்டகப்புலம் ஆகிய பகுதிகளுக்கு மிக விரைவில் மின்சாரம் கிடைக்கவிருக்கிறது. மயிலிட்டிக் கிராமசபையின் புதிய மின்விஸ்தரிப்புத் திட்டத்தின்படி பல லட்சம் ரூபா செலவில் இப்பகுதிகளுக்கு மின் இணைப்பு நிர்மாண வேலைகள் ஏற்கனவே பூர்த்தியாகியுள்ளன ஆனால் இன்னும் மின் விநியோகிக்கப்படவில்லை.

மயிலிட்டிக் கிராமசபைத் தலைவர் திரு. கு. தி. இராசதுரை இதுபற்றி மின்சார இலாகா அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தக் கொழும்பு சென்றுள்ளார். மற்றும் பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

---

ஷெரன் டேட் கொலை வழக்கு:

## மேன்சனும் 3 பெண்களும் கொலைக் குற்றவாளிகள்

நியுயோர்க், ஜன. 26

**சினிமா நடிகை ஷெரன்டேட் கொலை வழக்கில் விசாரிக்கப்பட்டு வந்த ஹிப்பிகளின் தலைவர் சார்ல்ஸ் மேன்சனும் அவரதுசகாக்களான மூன்று பெண்களும் குற்றவாளிகள் என ஜூரர்கள் தீர்ப்பு வழங்கியுள்ளனர்.**

ஷெரன்டேட் என்ற சினிமாநடிகை கொலை சம்பந்தமாக மேன்சனும் அவருடைய சகாக்களான இரு பெண்களும் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர் ஷெரன்டேட் கொலையுண்ட மறுதினம் கொலை செய்யப்பட்ட சூப்பர் மார்க்கட் சொந்தக்காரர் கொலை சம்பந்தமாக மேன்சனும் அவரது சகாக்களான மூன்று பெண்களும் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

இவர்களுக்குஎவ்விதமான தண்டனை விதிக்கப்படும் என்று இன்னமும் அறிவிக்கப்படவில்லை.

சினிமா நடிகை ஷெரன் டேட்டையும் சுபர்மார்க்கட் சொந்தக்காரர் ஒருவரையும் ஹிப்பிக் குடும்பத்தின்தலைவன் என்றுகூறப்படும் சார்ல்ஸ்மேன்ஸன் என்பவரும் அவரது சகாக்களான மூன்று பெண்களும் கொலை செய்ததாகக்குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

விசாரணையின் போது மேன்சன்தான் கடவுளின் பிரதிநிதியென்றும் வேறு விதமாகவும் வாக்கு மூலங்களைக்கொடுத்தும்கலாட்டா செய்துப் பரபரப்பு ஏற்படுத்திவந்தவர் தீர்ப்பு வழங்குவதற்கு சில தினங்களுக்கு முன அவர் பத்திரிகைகளுக்கு விடுத்த ஒரு அறிக்கையில் தம்மை சமூகம் தான் இந்த நிலைக்குக் கொண்டு வந்ததென்று குற்றஞ்சாட்டியிருந்தார். பல நாட்கள் ஆலோசனை நடத்தியபின்னர் ஜூரர்கள் தம்தீர்ப்பை தெரிவித்தனர்.

---

## தொலைக்காட்சி தொடர்பு கிரகம்

நியுயோர்க், ஜன. 26

தகவல் தொடர்பு செயற்கைக் கிரகம்ஒன்றினை இன்று அமெரிக்கா விண்வெளிக்கு அனுப்பியது. 12 தொலைக்காட்சித் தொடர்புகளுக்கும் ஆயிரக்கணக்கான நேரடி டெலிபோன் தொடர்புகளுக்கும்இந்த செயற்கை கிரகம் வழி செய்யும்.

---

## இடைக்கால தடைஉத்தரவு

சென்னை, ஜன. 25

இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 1970-ம் ஆண்டு தமிழ் அறநிலையச் செயல்பாட்டை இடைக்காலத்தில் நிறுத்தி வைக்குமாறு சென்னை உயர் நீதிமன்றம் இடைக்கால தடைஉத்தரவுபிறப்பித்துள்ளது.

தமிழ் நாடு அரசாங்கம் இயற்றிய சட்டத்தின்பிரகாரம் அர்ச்சகர்கள் பூசாரிகள் கோயில்களுக்கு பூசை செய்யும் உரிமையை ரத்துச் செய்து எவ்வகுப்பினராயினும் கோயில்களுக்குப் பூசை செய்வதற்கு தமிழ் நாட்டு அரசாங்கம் சட்டம் இயற்றியிருந்தது

இச்சட்டம் சம்பந்தமான ரிட்மனுவை நீதிமன்றம் அமனுதித்துள்ளது.

### மணிவாக்கு

ஒரு புல் முளைத்த இடத்தில் இரண்டு புல் முளைக்கவும், ஒரு கதிர் விளைந்த இடத்தில் இரண்டு கதிர் விளையவும் செய்பவனே, அரசியல் வாதிகள் அனைவரிலும் தேசத்துக்கு அதிக உபயோகமான ஊழியம் செய்தவன். அவனையே மனிதவர்க்கம் அதிகமாகப் போற்றும். — ஸ்விஃப்ட்.


# ஈழநாடு

Eelanadu Tamil Daily
Telegrams "EELANADU" Jaffna
Post Box 49, Jaffna Telephone 589

சாதாரண வருடம் தை மாதம் 14-ந் திகதி (27-1-71)


## அரிசியும் உபஉணவும்

பங்கீட்டரிசிப் புத்தகங்களை அரசாங்கத்துக்கே விலைக்கு விற்கக்கூடிய வசதி செய்யப்படவிருப்பதாக நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா யாழ்ப்பாணத்தில் தெரிவித்திருக்கிறார். இதன் மூலம் கணிசமான அளவு அந்நியச் செலாவணியை மீதப்படுத்த முடியுமென்றும் அவர் கருதுகிறார்.

வாரத்துக்கு ஒருவருக்கு இரண்டு கொத்து அரிசி வழங்கப்பட்டுவந்தது தேசிய அரசாங்கம் ஆட்சிபீடத்தில் இருந்த சமயம் உலகச் சந்தையில் அரிசியின் விலை அதிகரித்துவந்ததுடன் அரிசிக்குத் தட்டுப்பாடும் ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து பங்கீட்டரிசியைப் பாதியாகக் குறைத்து ஒரு கொத்து அரிசியை இலவசமாகவும் வழங்கியது. அரிசி குறைக்கப்பட்டது; மக்கள் மத்தியில் இது ஓரளவுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. தாங்கள் ஆட்சிக்கு வந்தால் வெட்டப்பட்ட அரிசியை மீண்டும் கொடுப்பதாக கூட்டணியினர் வாக்குறுதி யளித்திருந்தனர். மிகப் பெரும்பான்மைப்பலத்துடன் கூட்டணி ஆட்சிபீடத்துக்குவந்தது. வாக்குறுதியை நிறைவேற்றும்பொருட்டு அரசாங்கம் ஒரு கொத்து அரிசியைத் தொடர்ந்து இலவசமாகவும் இரண்டாவது கொத்து அரிசியை எழுபத்தைந்து சதமாகவும் வழங்க தீர்மானித்தது. இப்பொழுது இதுவே நடைமுறையிலிருந்து வருகிறது. இரண்டாவது கொத்து அரிசி விலைக்கு விற்கப்படுவதானாலும் இந்த அரிசியை வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதிசெய்ய வேண்டியிருக்கிறது. இதற்காக நாட்டின் பணம் கணிசமான அளவு வெளியே செல்கிறது.

இது ஒருபுறமிருக்க எல்லோரும் இரண்டு கொத்து அரிசியையும் வாங்குவதில்லை பணம் கொடுத்து அரிசி வாங்க முடியாதவர்கள் இலவச அரிசியைமட்டும் வாங்குகிறார்கள். பணம் கொடுத்து வாங்கமுடியாதவர்களை சிலர் பயன்படுத்தி கள்ளமார்க்கட்டில் அதை அதிக விலைக்கு விற்று ஆதாயம் தேடவும் வாய்ப்பேற்படுகிறது. இரண்டாவது கொத்து அரிசியை சில வாரங்களுக்கு வாங்குவதும் சில வாரங்களுக்கு வாங்காமல் விடுவதும் நாட்டுக்கு எந்தவிதத்திலும் போதிய பயன்தராது.

எனவே இரண்டு கொத்து அரிசிக்கும் தனித்தனி பங்கீட்டுப்புத்தகம் வழங்கி பணம் கொடுத்து அரிசி வாங்குவதற்கான பங்கீட்டுப் புத்தகத்தை அரசாங்கமே திருப்பி விலைக்குப் பெற்றுக் கொண்டால் அரிசி இறக்குமதிசெய்வதைக் குறைத்துக்கொள்ளமுடியும். இது நல்ல யோசனைதான்.

ஆனாலும் உள்நாட்டில் அரிசி உற்பத்தியை அதிகரித்து சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்ள முடிந்தால் பங்கீட்டு முறையே அவசியப்படமாட்டாது. அரிசிக்காக வெளிநாடுகளுக்கு நமது பணம் போகவேண்டிய அவசியமும் மேற்படமாட்டாது.

செத்தல்மிளகாயின் விலை உச்சத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறது. செத்தல்மிளகாய் மட்டுமல்ல நாட்டுக்குத் தேவையான உபஉணவுப் பொருள்கள் அனைத்தையும் உற்பத்தி செய்து சுயதேவையைப் பூர்த்திசெய்யமுடியுமென்றும் நிதிஅமைச்சர் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார் இது உண்மைதான். முன்னைய அரசாங்கம் அதிக உணவு உற்பத்தி இயக்கத்தை ஆரம்பித்தபோது புகையிலை போன்ற காசுப் பயிர்களின் உற்பத்தியைக் கைவிட்டு வெங்காயம், உருளைக்கிழங்கு போன்றவற்றை வடபகுதி விவசாயிகள் செய்கைபண்ணத் தொடங்கினர்.

இதற்காக அவர்களுக்குக் கிடைத்தது வெறும் புகழ்ச்சிதான், இயற்கைஅழிவு ஏற்பட்டபோது கூட அவர்களுக்குச் சரியானமுறையில் நிவாரணம் கூடக் கிடைக்கவில்லை.

போதிய உதவியும் ஊக்கமும் அளிக்கப்பட்டால் வடபகுதி விவசாயிகள் உணவுப்பொருள்களில் நாட்டின் தேவையைப் பூர்த்திசெய்வார்களென்பது நிச்சயம்.

## பாராட்டு விழா

மாவிட்டபுரம், செவ் ஆசிரியர்களாக இருந்து ஒய்வுபெற்றுள்ள பண்டிதர். வ. முத்துக்குமாரு, த. சிவகுரு, த. சுப்பிரமணியம் த. சிவக்கொழுந்தர், க. நாகலிங்கம், இ. தாமோதரம்பிள்ளை, சி. கனகசபை ச. கந்தவனம், க. கதிர்காமர் ஆகியோரதும். கிராம சேவையாளர்களான திரு. இ. சுப்பிரமணியம், திரு. வே. நடராசா ஆகியோரதும். சமாதான நீதவான் திரு. சி. அருணாசலத்தினதும் ஒய்வு பெற்ற உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. த. செல்லமுத்துவினதும் சேவையைப்பாராட்டு முகமாகவே கட்டுவன் முற்போக்கு வாலிப முன்னணியின் ஆதரவில் விழா வெடுக்கப்பட்டது.

## வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு

கோட்டை, செவ்வாய் 10,000 வேலையற்ற இளைஞர்களுக்கு நீர்ப்பாசன, மின்சக்தி உயர்வழிப் போக்குவரவு அமைச்சின்கீழ் உள்ள பொறியியல் பிரிவில் நாள் சம்பளத்தில் வேலைவழங்கப் படவுள்ளது.

அமைச்சின்கீழ் உள்ள பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களுக்கு இவர்களைப் பயன்படுத்துவார்கள். ஒருவருட பயிற்சித்திட்ட காலத்தில் இவர்களுக்கு நாள்ச் சம்பளம்வழங்கப்படும். அதன்பின் இவர்கள் வேலையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

## நிதி அமைச்சர்

# "அரசின் கொள்கைக...

# வர்த்தக ஸ்தாபனங்...

வரவு - செலவுத் திட்டம்' என்னும் பொருள் பற்றி நிதி அமைச்சர் டாக்டர் என், எம். பெரேரா யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நிகழ்த்திய உரை இங்கே தரப்பட்டுள்ளது.

தேசத்தின் அபிவிருத்திக்காக இந்த அரசின் கொள்கையை ஏற்று வழி நடக்கத் தவறும், மறுக்கும், வர்த்தக ஸ்தாபனங்களை, தனியார் சொத்தை சுவீகரிக்கும் அதிகாரம் எனக்கு தரப்பட்டுள்ளது.

இந்த நாட்டின் தேசிய வருமானத்தில் தேயிலைத் தோட்டங்கள் முக்கிய இடத்தை பெறுகிறது. வருமானத்தில் 60 சதவிதம் தேயிலையில் தங்கியுள்ளது. ஆதலால், இத் தோட்டங்கள் சிறந்த முறையில் பராமரிக்கப்படவேண்டும். தேசத்தின் சொத்தாகிய தேயிலைத் தோட்டங்களை, கம்பெனிகளாவது, தோட்டத்துரைமாராவது கண்காணிக்கத் தவறினால் அவர்கள்பொறுப்பில் அத்தோட்டங்கள் இருப்பதை தொடர்ந்து அனுமதிக்கமுடியாது. தோட்டத்தில் தேயிலைத் செடிகளை வளர்க்க நவீன இயந்திரங்களை தருவிக்க தவறுவார்களேயானால் அவர்கள் பொறுப்பிலிருந்து சுவீகரிக்கப்படும். றப்பர், தென்னந் தோட்டங்களுட்கும் இந்த நிலைதான் ஏற்படும்என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஐவுளி ஆலைகள், தொழிற்சாலைகளையும் சுவீகரிக்க அரசுக்கு சட்டத்தின் மூலம் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

### வடபகுதி விவசாயிகள்

அபிவிருத்தி வேலைகளில் வடக்கு கிழக்கிற்கு உரிய சிறப்பான இடம் தரப்படவிருக்கிறது. விசேடமாக உப-உணவு உற்பத்தியில் வடபகுதி விவசாயிகள் திறமைசாலிகளாக இருக்கின்றனர். விவசாயத்தில் நன்கு முன்னேற்றமடைந்துள்ளனர். விவசாயத்தை முன்னேற்ற நியாயமான அளவு உதவிதர அரசாங்கம் தயாராக இருக்கிறது. நீர், தானியம் உபகரணம் போன்ற உதவிகளை அரசு வழங்கும் பொருளாதாரத் துறையில் இப்பகுதியை முன்னேற்ற விசேஷ தொழில் துறைகளுக்கு முக்கியத்துவம் தரப்படவிருக்கிறது. இதற்கான அத்திபாரமாக மின் இணைப்பு ஆரம்பவேலைகள் நடந்துள்ளன. மின் சக்தி பெறக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளதால். இப்பகுதியைமுன்னேற்றலாம் நாட்டின் எந்தப் பகுதியும் புறக்கணிக்கப்படாது வடக்குமாகாணம் புறக்கணிக்கப்படுகிறதெனக் கூறப்படுவது வெறும் பிதற்றல்.

எமக்கும். தமிழரசுக்கட்சியினருக்கும் சொந்தத்தில் உட்பகை இருக்கலாம் நாம் எல்லாரும் இலங்கையர்கள் என்ற முறையில் ஒன்றாக இணைந்து இந்த நாட்டை முன்னேற்ற வேண்டும். ஒவ்வொரு இனமும், தனித்து வாழ்ந்து இந்த நாட்டை முன்னேற்ற முடியாது. தாய்த்திருநாட்டின் சகோதரர்களாக வாழும் நிலைமை ஏற்படவேண்டும்.

### வரவு-செலவுத் திட்டம்

வரவு-செலவுத் திட்டத்திற்குவருவோம் உள்நாட்டை பொறுத்தவரைநாணய பற்றுக்குறை 40 கோடி ரூபா இருந்தது. வரவைவிட செலவு 140 கோடி ரூபா வரை மிஞ்சியிருந்தது குறிப்பிடத்தக்கது. நிதி அமைச்சர் பொறுப்பில் வெறும் களஞ்சியம் தான் விடப்பட்டிருந்தது கடன்பட்டு மேலும் கடன்பட்டு வெறுமனேதான் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. வெளிநாட்டைப் பொறுத்வரை நிலைமை மேலும் மோசமடைந்திருந்தது மேற்கு ஜேர்மனியிடமிருந்து 7 கோடி மார்க் கடனை பெறப்பட்டிருந்தது இலங்கை நாணயப்படி இது 10.7 கோடி ரூபாவாக இருக்கும் செப்டம்பர் 15-ம் திகதி பணத்தை திருப்பி செலுத்த வேண்டிய நிலைமை இருந்தது. என்றால் எப்படி முடியும்? ஆனாலும் நான் நம்பிக்கையைகைவிடவில்லை. அந்த வேளையில் பல அயல்நாட்டு வங்கியிடமிருந்து பெற்ற கடனை கட்டவேண்டியிருந்தது ஒன்றுமே செய்யமுடியாத நிலைமை.

அதே வேளையில், என் நிலைமையை உணராமல், இளைஞர்கள் வேலைவேண்டும் என்று குரல் எழுப்பிக் கொண்டிருந்தார்கள். சிலர், எனக்கு வயதுபோய்விட்டதாகவும் அதனால் தான் பிரச்னையை தீர்க்க முடியாமலிருப்பதாகவும், இளைஞர்கள் மத்தியில் கூறினார்கள். புரட்சியை நான் கைவிட்டுவிட்டேனென்றும் உத்தியோகரீதியில் என்னை ஓய்வெடுக்க வேண்டும் என்றும் சிலர் கூறினார்கள்.

நான் முதலில் செய்ததென்ன? கூட்டுறவு வங்கிகளிடமிருந்து 3 கோடி ரூபா கடனை பெற்று என் திட்டத்தை ஆரம்பித்தேன் பெரும் ஸ்தாபனங்களிடமும், வருமானவரி செலுத்துவோரிடமும், அரசாங்கத்திற்கு வருமான வரியை முன் கூட்டியே கட்டுமாறு கேட்டுக்கொண்டேன் இதன் மூலம் 5கோடி ரூபா கிடைத்தது வரவு-செலவு திட்டத்...

### வரி ...

### எவ்வி...

தின்முன் நிலைமை... ளிக்க எடுத்த நட... இதுதான்...

## "அரசியல் வாதிகளின் தே..ட்டங்க...

## படிப்படியாக சுவீகரிக்கப்படும்"

### கேள்விகளுக்கு நிதி மந்திரி பதில்

யாழ்ப்பாணம், புதன் "பூரணமான கம்யூனிச அமைப்புள்ள சமுதாயத்தில் பணப்புழக்கம் தட்டுப்பாடு இல்லாமலிருக்கும் ஒரு பூரண பொதுவுடமை அமைப்பில் குளிக்கும் அறை மட்டுமல்ல, மலகூடம் கூட பொன்னால் கட்டக்கூடிய நிலை ஏற்படும்"

சோஷலிச சமூக அமைப்பில் நாணய புழக்கம் இல்லாத நிலைமை ஏற்படுமோ என்று யாழ். நகர மண்டபத்தில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு நிதி அமைச்சர் டாக்டர் என். எம், பெரேரா மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அப்படி நிலைமை ஏற்பட்டால் நிதி அமைச்சர் என்ற பதவி இல்லாமல் போய்விடுமா? என்று மற்றொரு கேள்வி கேட்கப்பட்டபோது நிதி அமைச்சர் சிரித்தபடி என் பதவியை எடுக்கப் பார்க்கிறீரா? என்று கேட்டார்.

சோஷலிச நாட்டிற்கு பணம் தேவையென்றும் பொருள் பரிவர்த்தனைக்கு நாணயம் பரிவு கோலாக அமையாது என்றும் நாணயப் பழக்கம் இருக்கும் என்றும் நிதி அமைச்சர் தெரிவித்தார்.

நிதி அமைச்சர் மேலும் கூறியதாவது:

தேசிய செல்வத்தை பொது சம உடமையாக்கிய பின் ஆலைகளினாலும், தொழிற்சாலைகளினாலும் வர்த்தக ஸ்தாபனங்களினாலும் வருமானம் காண முடியும். அந்த வேளையில் வருமான வரி இருக்காது. பிரதானமான தேசிய வருமானம் தொழிற்சாலைகளிலிருந்து வந்துகொண்டிருக்கும். இந்த நிலையில் தனியாரிடமிருந்து பெறும் வரி குறைவாக இருக்கும். இதற்கான அத்திவாரம் இன்று இடப்பட்டுள்ளது. கூட்டுத்தாபனங்கள் அரசுக்கு நிதி உதவி அளிப்பதை அதிகரித்துள்ளேன். கூட்டுத்தாபனம் வரவு-செலவு தயாரிக்கும்போது கூடிய பங்கை அரசுக்குக் கொடுக்க ஆலோசனை கூறியுள்ளேன்.

சோஷலிச சமூக அமைப்பில் பொதுத்துறை வருமானம் கூட தனியார் துறை வருமானம் குறையும்.

வர்த்தக சுவீகரிப்பு சட்டத்தினால் தோட்டங்களையும் சுவீகரிக்க முடியுமா? என்று ஒருவர் கேட்டபோது நிதி அமைச்சர் தான் எதையும் சுவீகரிப்பேன். ஆனால் எல்லாவற்றையும் சுவீகரிக்கமாட்டேன். இந்தச் சட்டத்திற்குப் பயந்து வர்த்தகர்கள் நல்ல முறையில் ஸ்தாபனத்தை நடத்துவார்கள் என்பது என் கருத்து.

கேள்வி: வர்த்தக சுவீகரிப்புச் சட்டம் இல்லாமல் தற்போதுள்ள அதிகாரத்தைக் கொண்டு ஸ்தாபனங்களை சுவீகரிக்க முடியாதா?

பதில்: அவசரகால நிலைமையில் அப்படி செய்ய முடியும். நிரந்தரமாக அவசரகாலச் சட்டத்தை அமுல் நடத்த முடியாது. இப்பவே பொலிசாருக்கும், இராணுவத்தினருக்கும் கூடிய அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளதாகப் பலர் புகார் செய்கிறார்கள். இந்த சட்டத்தின் நோக்கம் வர்த்தக ஸ்தாபனங்களை சுவீகரிப்பதல்ல. ஸ்தாபனம் நல்ல முறையில் நடைபெறவேண்டும் என்பதுதான்.

கேள்வி: எப்படியான

# ...ச்சர் கூறுகிறார்

# ...களை ஏற்க மறுக்கும் ...ங்களை சுவீகரிப்போம்

## ...வரி செலுத்தும் செல்வந்தர் மீது

## ...வ்வித நடவடிக்கையும் இல்லை"

( கா: யோகநாதன் )

...ன் நிலைமையை சமா... எடுத்த நடவடிக்கை ... ...த்து வங்கியுடனும்மற் ...டன் பெற்றவர்களிட ...பேச்சுவார்த்தைநட ...ாலக்கெடுவை பின் ...ச் செய்தேன் முதலா ... அமைப்பு முறை ...நிலைச்சுவந்தரசிடமிரு ... ஆட்சிப்பொறுப்பை ...போது என்னென்ன ...கள் எதிர்நோக் ...தை இப்பொழுது ...ருப்பீர்கள். ...ாட்டில் ஆயுதப் புர ...சய்து, பலாத்காரத் ... முதலாளித்துவ ஆட் ... தூக்கி எறிந்திருந் ...சூழ்நிலை மாறியிருப்ப ...ு. பிரச்னைகளுக்குத் ...காணும் வழிகளும் ...பட்டிருக்கும். இன் ...நீதிமன்றம், சட்டங்களை. காற்றில் பறக்கவிட்டு, தமது நோக்கம் நிறைவேற எமக்கேற்றபடி திட்டங்களை அமுல் நடத்தியிருக்கமுடியும் ஆனால் மக்களின் சம்மதத்துடன் தான் ஆட்சிப் பொறுப்பைக் கையேற்றோம் மக்கள் ஜனநாயக முறைப்படி ஆதரவு தெரிவித்த படியால் ஜனநாயக முறையைத்தான் பின்பற்றவேண்டும். இதனை சமசமாஜக்கட்சி மட்டும் ஏற்றுக்கொள்ளவில்லை. மற்றும் இரு கட்சிகளும் ஏற்றுக்கொண்டன.

கூட்டணியைப் பொறுத்தவரையில், சமரசஉடன்பாடும், பொதுவேலைத் திட்டம் ஆகியவற்றை முன்வைத்து அதன் அடிப்படையில் மக்களிடம் வாக்குப் பெற்றோம். அடிப்படையில் செயல்படக்கடமைப் பட்டுள்ளோம்.

### விமோசனம் காண வழி

என்னைப் பொறுத்தவரையில், அமைதியான முறையில், நிதிஅமைச்சர் என்ற முறையில் நான், விமோசனம்காண வழிதேடிக்கொண்டிருந்தேன். இதனால்தான் முதல் வரவு-செலவுத் திட்டம் உருவாகக் காலம் எடுத்தது. வேறு எவரும் இதைவிட விரைவில் உருவாக்கியிருக்கமுடியாது. என்னை வயோதிபர் என்று ஏளனம் செய்த இளைஞர்கள் மத்தியில் வரவு-செலவுத் திட்டத்தைப் பார்த்தபின். மாற்றம் ஏற்பட்டது.

வரவு-செலவுத் திட்டத்தின் பிரதான பணி, என்ன இன்றுள்ள கஷ்ட நஷ்டங்களை மக்களுக்குச்சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது. உலக வங்கியுடன் முன்னைய அரசாங்கம் நடத்திய அந்தரங்க பேச்சுவார்த்தையை அம்பலப்படுத்தினேன். சர்வதேச நிதிஸ்தாபனம் என்ற போர்வையில் தேசிய அரசாங்கம் செய்துள்ள ஒப்பந்தம், நம்மை அடிமைப்படுத்திவிட்டதை விளக்கிக் கூறினேன்.

அந்த ஸ்தாபனத்தின் நிபந்தனையின் பேரில்தான் அரிசியின் அளவை தேசிய அரசாங்கம் குறைத்தது. அப் பேச்சுவார்த்தைகள் பற்றிய தஸ்தாவேஜுகளை சமர்ப்பித்தேன். இது தவிர பொதுத்துறைகூட்டுத்தாபனம், தனியார்துறைக்கு கையளிக்கப்பட்டு, மாறிவந்ததைச் சுட்டிக்காட்டினேன். பெரும் செல்வந்தர்மீது விதிக்கப்பட்ட வரிநீக்கப்பட்டு, ஏழைகள்மீது வரியை அதிகரிப்பதற்கு, வழிசெய்யப்பட்டது. நாணய மதிப்பு குறைப்புப்போன்ற நேர்முகசெயலினாலும், 'பீக்ஸ்' திட்டம் போன்ற மறைமுக செயலினாலும், சர்வதேச நிதிஸ்தாபனத்தின் நிபந்தனை கடந்த அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த நிலைமைகளை நான் சுட்டிக்காட்டி சர்வதேச ஸ்தாபனத்திற்கு எதிராக நாம் ஆரம்பித்த போராட்டம் தொடர்ந்து நடந்து வருகிறது. நான் இங்கிருந்து கொழும்புதிரும்பியதும், என்னைச் சந்திக்க சர்வதேச ஸ்தாபன பிரதிநிதிகள் காத்திருப்பார்கள். இந்தப் போராட்டம் முக்கியத்துவம் வாய்ந்தது. தேசத்தின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் போராட்டம். சுயகௌரவம் இப்போராட்டத்தில் அடங்கியிருக்கிறது.

### 100, 50 ரூபா நோட்டுகள்

அடுத்த கட்டம் என்னுரைப்பொறுத்தவரை வேண்டிய நிதியை எப்படிப்பெறுவதென்பது? செல்வந்தர்களுக்கு கடும் வரிவிதித்தேன். 100,50 ரூபா நோட்டுக்களை, மாற்றும் திட்டத்தைவிட, செல்வந்தரிடம் வரி பெறும் திட்டத்தை அமுல் நடத்துகிறேன். இங்குள்ள சிலரும், நோட்டுக்களை மாற்றுவதற்காகவெய்யிலில்காத்திருப்பார்கள் அதற்காக என்மீது கோபமடைந்திருப்பார்கள். பெண்கள் சேமிக்கும் மனப்பான்மையுடையவர்கள். சேலைமடிப்புக்குள் சில நோட்டுக்களைக் கண்டெடுத்துள்ளதாக சில பெண்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதற்கு நான் உதவிசெய்யமுடியாது. மக்கள் சேமிக்கவேண்டும்தான். இதுசேமிப்பல்ல பின்என்ன? பதுக்கல் என்றுதான் கூறுவேன், சேமிக்கப்பட்டபணம் பிரயோசனப்படும்வகையில் முதலீடு செய்யப்படவேண்டும்- பணத்தைகுசினியிலும் தலையணைக்குள்ளும் பதுக்கினால் அதனால் சமூகத்திற்கு பயன் ஏற்படாது.

அநுராதபுரத்திலுள்ள பிரபல வர்த்தகர் ஒருவர் 28லட்சம் ரூபாவுக்கு 50 ரூபா100 ரூபா நோட்டுக்கள் வைத்திருந்தார். அவர் ஒருசெம்புச்சல்லிகூட அரசாங்கத்திற்கு வரிகொடுக்கவில்லை எ...திட்டத்தின்பின் தாமாகவே பணத்தை ஒப்படைத்தார், பெருந்தொகையாக இருந்ததாலோ என்னவோ. இருதடவையாக ஒப்படைத்தார். அவரை மனதார வாழ்த்துகிறேன்- அதில் 18 லட்ச ரூபா வரியாக எடுத்துக்கொண்டேன் மிகுதி பத்து லட்சம்ரூபா வங்கியில் அவரின் பெயரில் போடப்பட்டது- 50,100ரூபா நோட்டுக்களால் பாதிக்கப்பட்ட மக்கள் பெரும் புள்ளிகள் இதிலிருந்து பெரும் புள்ளிகளை பாதுகாக்கசாதாரணமக்கள் தான் வெய்யிலில்காய்ந்தார்கள். பணக்காரர்களுக்குஎதிராக நான் போராடும்போது அவர்களைக்காப்பாற்றஏழைகள் எனக்குஎதிராக போராடுகிறார்கள்- முதலாளிகளுக்காக தோட்டுமாற்றி 70பலஸ் ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்

### உண்மை சொன்னால்...

10ரூபா பிச்சை சம்பளம் எடுக்கும் பலர் 1000 ரூபா மாற்றியுள்ளார்கள்- இது தங்கள்சேமிப்பு எனிறுஎனக்குஎழுதியிருக்கிறார்கள்- இதனால் அவர்களின் பிச்சைச் சம்பளத்தை ரத்துச்செய்யுமாறு உத்தரவிட்டுள்ளேன் அவர்கள் உண்மை சொன்னால், மீண்டும் அவர்களுக்குப் பிச்சைச் சம்பளம் வழங்கப்படும். இப்படி புலுடா என்னிடம் விட்டு தப்ப முடியாது. இவர்களின் விபரங்கள் என்னிடம் உண்டு. இவர்கள் பற்றி தொடர்ந்து ஆராயப்படும். எப்படி திடீரென 1000 ரூபா கிடைத்ததென்று கூறுவிடில் அந்த 1000 ரூபாவும் அரசாங்கத்தின் காணிக்கையாகிவிடும்.

பெரும் செல்வந்தராக இருந்தாலும்சரி ஒழுங்காக வரி செலுத்தினால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படாது. பணத்தை மறைத்து வைத்து உரிய வரியைச் செலுத்தாதவர்கள் மீது தான் நடவடிக்கை எடுக்கப்படும். பருத்தித்துறையிலுள்ள வங்கி கிளையில் தற்பொழுதுள்ள நிலைமை பற்றி விசாரித்தேன். நிதி நிலைமையில் நல்ல திருப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் போதிய பணம் புளக்கத்திலிருப்பதாகவும் பலர் வங்கிகளில் பணம் போட முன்வந்துள்ளதாகவும் தெரிவித்தனர். இந்த ஒரு நடவடிக்கை பல துறைகளில் பிரதிபலிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. வரிகட்டாமலிருந்தவர்களைக் கட்டும் நிலைமைக்குக் கொண்டுவந்துள்ளது.

### சேமிப்பு அவசியம்

சேமிப்பு பழக்கம் அவசியம். பணத்தை சல்லிமுட்டியில் போடாமல் வங்கியில் போடுவதால் சமூகத்திற்கு பயன் கிடைக்கும். சேமிப்பு என்பது முயற்சியின் பயனாக பெறும் லாபம். அந்த லாபத்தைப் பதுக்கிவைக்காமல் பயனுள்ள வழியில் மேலும் முதலீடு செய்ய வேண்டும்.

சேமிப்பு பணத்தின்வட்டி விகிதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. மென்மேலும் சேமிப்பு பயன்படுத்தும் வகையில் வழி செய்யப்பட்டுள்ளது. கட்டாய சேமிப்புக்கான நடவடிக்கை தனித்து மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டு உச்சவரம்பு விதிக்கப்பட்டுள்ளது. எந்த தனியார் கம்பெனியும் 12 சதவீத லாப பங்கை பங்காளருக்குப் பகிர்ந்தளிப்பதற்கு தடை செய்யப்பட்டுள்ளது. அதற்கு மேல் மிஞ்சிய லாபத்தை அரசு கட்டாய சேமிப்பாக ஏற்றுக் கொள்ளும். சகல வரிகளும்செலுத்தியபின் 3500 ரூபாவிற்கு மேல் வருமானத்தை எடுக்க முடியாது. மிகுதியுள்ளது கட்டாய சேமிப்பாக ஏற்றுக் கொள்ளப்படும். இது வரியல்ல. நிர்ப்பந்த வடிவில் சேகரிக்கப்படும் இப்பணத்தைத் திருப்பி எடுக்கலாம். கட்டாய சேமிப்புக்கு 5 சதவீத வட்டி. 5 ஆண்டு காலத்தில் திருப்பிப் பெறலாம். 10 ஆண்டுகளின்பின் சேமிப்பு இரண்டு மடங்காக வரும், 1000 ரூபா கட்டினால் 10 வருடத்தின்பின் 2000 ருவா கிடைக்கும்.

மற்றவர்களிடம் நிதிதிரட்டி அபிவிருத்தி செய்வதிலும் பார்க்க எமது பணத்தை அபிவிருத்திக்கு கொடுப்பது நல்லதல்லவா?

ஒரேயொரு முறை செல்வ முதலீடு வரியொன்று அறவிடப்படும். தனிப்பெரும் செல்வந்தர்மீது வரியைப் போட்டுப் பிரச்னையைத் தீர்க்க முடியாது. வருமான வரி தவிர மறைமுக வரிகளாக சில பொருட்கள்மீது வரிவிதிக்கும் நிலைமை ஏற்பட்டது விஸ்கி, பிரண்டி, ஜின், பியர், போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளு, சிகரட், சுருட்டு, பீடி போன்றவற்றிற்கும் வரி விதிக்கப்பட்டது. இப்பிரச்னையைத் தீர்க்க எல்லாரும் பங்கு கொள்ள வேண்டியது அவசியம்தானே.

### வெளிநாட்டுக் கடன்

வெளிநாட்டிலிருந்து பெறப்படும் கடன், நாட்டின் அபிவிருத்தி வேலைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும். சாதாரண மக்களுக்கு உண்மைநிலையை சொல்லித்தான் வேண்டும்

இளைஞர் மத்தியில்காணப்படும் அமைதியின்மை, விரக்தி மனப்பான்மை, வெறுப்பான போக்கு வேலையில்லாத் திண்டாட்டம் தீர்க்கப்பட வேண்டும். தேசத்தை திட்டமிட்ட அபிவிருத்தியின் அடிப்படையில் தீர்க்கும் பிரச்னை உண்டு. 5 வருடத்திட்டம் இந்நாட்டை நிதித்துறையிலும் பொருளாதாரத்துறையிலும் வழிநடத்திச் செல்லும். 5 ஆண்டுகால அபிவிருத்தித் திட்டத்தில் ஒரு ஆண்டுகால இடைவெளியில் குறுகிய கால அபிவிருத்தி வேலைகள் இடம்பெறும் இதற்காக 20கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் வடக்கு தெற்கு என்றபாகுபாடின்றி நாட்டின் சகல பகுதிகளும் அபிவிருத்தி செய்யப்படும். மக்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கக்கூடிய திட்டம் இது.

ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரதான சட்டமான வர்த்தக சுவீகரிப்புச் சட்டம் தேசத்தின் பொருளாதாரத்துடன் திருவிளையாடல் நடத்த பெரும் முதலாளிகளுக்கு அனுமதி கொடுக்காது.

### பெரிய போராட்டம்

இந்நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்க அந்நிய ஏகாதிபத்தியவாதிகளுடனும் முதலாளிகளுடனும் பெரிய போராட்டத்தை எதிர்நோக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. சர்வதேச நிதி ஸ்தாபனம் உலகவங்கி ஆகியவற்றுடனும் போராட வேண்டியுள்ளது. நாட்டின்மீதுபலவகையான நிர்ப்பந்தம் போடப்பட்டுள்ளது.

ஐரோப்பாவிலிருந்து இலங்கைவரும் பொருள்களுக்கு தீர்வை விதித்திருக்கிறார்கள்: அவர்கள் துறைமுகம் சீர்கெட்டிருப்பதால் அங்கு ஏற்படும் செலவினத்தை சரிக்கட்டுவதற்கு லங்கைக்கு வரும் பொருள்களுக்கு தீர்வை விதிக்கப்பட்டுள்ளது. இப்படிப் புதிய வகையான பல நிர்ப்பந்தத்தை எதிர்த்துப் போராட வேண்டியிருக்கிறது. முன்னைய அரசாங்கத்தின்போது தொடர்ந்து நடத்திவந்த இந்த நிர்ப்பந்தத்திற்கு நாம் பணிய முடியாது. அப்படிப் பணிந்தால் கால் நூற்றாண்டு காலமாக நாம் பெற்றுவந்த சுதந்திரத்தை இழந்து தொடர்ந்து அடிமைகளாக இருக்கும்நிலைமை ஏற்படும்.

எம்மத்தியில் இனத்தை இனம் எதிர்த்துப் போராடுவதனால், நாட்டை அபிவிருத்திசெய்ய முடியாது. சிறுசிறு தப்பபிப்பிராயங்கள் சந்தேகங்களை தற்காலிகமாக உள்ள அரசியல் ஆதிக்கப் போராட்டங்களை கைவிடவேண்டிய காலம் வந்துவிட்டது இலங்கையரான நாம் பிரதான எதிரியை எதிர்த்து தோளோடு தோள் நின்று போராட வேண்டியநிலைமை ஏற்பட்டுள்ளது.

---

## ...ட்டங்கள் ...படும்" ...தில்

...ங்களை சு...ரிப்பீர் ... உதாரணத்திற்கு ...கூறுகிறேன். களுத் ...தில் சாராயம் வடிக் ...தொழிற்சாலை ஒன்று ...றது. அங்குள்ள ... தொழிலாளருக்கும் ...ும் இல்லை. சம்பள ... வழங்கப்படவில்லை ... கொடுமையானது. ... குடும்பங்களை நடுத் ...தில் விட முடியுமா? ... அரசு சுவீகரிக்க தற் ... அதிகாரமில்லை ... சட்டத்தைப் ...து அதனை சுவீகரிப் ... அப்படி செய்யா ... 200 குடும்பங்கள் ...தோடு சாராயம் விற் ...கவேண்டும் என்ற ...் நோக்கமும் பாழாகி ... முதலாளிமார்களை ...று த்துவத்தாகவே ... சட்டம் இருக்கிறது

...வி: கட்டாய சேமிப் ...ட்டத்தில் முதலாளி ... சி... சலுகைகள் ...கப் பட்டுள்ளதாகக் ...படுவதில் உண்மை ...கிறதா?

...: செனட் சபையில் ...ட்டத்திற்கு தடங்கல் ...ும் நிலைமை இருந்த ... முதலாளிமாரின் சில ...க்கைகளை ஏற்றுக் ...டேன் முதலாளிமார் ...ய சேமிப்பு இல்லா ...ருமானத்தில் 10வீதம் ...க தரச் சம்மதித் ...னர் இதனால் அர ...தான் லாபமுண்டு. ...ய சேமிப்பின் ... வருடத்தின் பின் ...றைத் திருப்பிக் ...கவேண்டும். ஆனால் 10 வீத வரி திருப்பிக் ...டுக்கவேண்டியதில்லை ... அரசுக்கே சேரும் ...ல்தான் இதை ஏற் ...ாண்டேன்

கேள்வி: பத்திரிகை நிறுவனங்களை உடனடியாகப் பொறுப்பேற்பீர்களா?

பதில்: பத்திரிகை ஸ்தாபனமொன்றை சிலர் கூறுவதுபோல நாங்கள் ஏற்கனவே எடுத்திருந்தால் அதைப்பற்றிய அந்தரங்கங்களை அறிய முடியாத நிலை ஏற்பட்டிருக்கும். விசாரணைக்கமிஷன் மூலம் பல தகவல்கள் வெளிவந்துள்ளது யூ என் பியும் தமிழரசுக்கட்சியும் பிற அந்நிய நாட்டு ஸ்தாபனங்களுடன் சேர்ந்து நடத்திவந்த அரசியல் சதிபற்றி அறியக்கூடியதாக இருந்தது. படிப்படியாக அந்த பத்திரிகை நிறுவனத்திற்கு நஞ்சூட்டப்படும். உடனடியாக பத்திரிகை நிறுவனங்களை எடுத்தால் பெருந்தொகையான பணம் நஷ்டஈடாக வழங்க வேண்டி ஏற்படும் தற்போதுள்ள நிதிநிலைமையில் அது சரிவராது. மெதுவாகவே பத்திரிகை நிறுவனத்தின் செல்வாக்கை குறைத்துவருகிறோம், முதல்படியாக அரசாங்க விளம்பரங்களை நிறுத்திவிட்டோம். கொழும்பிலுள்ள பத்திரிகைஸ்தாபனமொன்றிலிருந்து வெளியாகும் பத்திரிகையின் பக்கங்களை எட்டாக குறைக்கும்படி செய்துள்ளோம்: அங்கு உயர் சம்பளம் பெற்றுவந்த 8 பேர் வெளிநாட்டுக்குச்சென்றுள்ளனர்: ஆதலால் இந்த நிறுவனம் நீண்டகாலம் நிலைநிற்காது"

கேள்வி: தமிழரசு தலைவர் திரு எஸ் ஜே வி செல்வநாயகம், தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு ஜி ஜி பொன்னம்பலம், திரு எஸ் தொண்டமான், திரு சி பி டி சில்வா மற்றும் அரசியல்வாதிகளின் பெருந்தொகையான தோட்டங்களை சுவீகரிக்க நடவடிக்கை எடுப்பீர்களா?

பதில்: வெங்கலக்கடையில் யானை புகுந்தமாதிரி திடீரென எல்லாவற்றையும் செய்யமாட்டோம். இத்தோட்டங்களையும் சுவீகரிக்க படிப்படியாக நடவடிக்கை எடுப்போம். எந்தெந்த வேளைகளில் என்னென்ன நடவடிக்கை எடுப்போம், என்பது அரசியல்வாதிகளுக்கு தெரிந்திருக்கவேண்டியதாகும்

கேள்வி. வங்கிகளையும் தேசியமய மாக்குவீர்களா?

பதில்: இவற்றையும் படிப்படியாகத்தான்செய்வோம்.

கேள்வி: தற்பொழுது வெளிநாடுகளிலிருந்து காரின் உதிரி பாகங்களை வரவழைத்து இங்கு இணைப்பதைவிட்டு சொந்தமாகவே இங்கு கார்களை தயாரிப்பீர்களா?

பதில்: முன்னேற்றமடைந்த யுகோசிலேவியாபோன்ற சோஷலிச நாடுகளில்இன்றுகூட பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துகார்களை இணைக்கிறார்கள்: இச்சின்னஞ்சிறிய நாடு சொந்தமாக கார் தயாரிக்காது தொடர்ந்து பாகங்களை இறக்குமதி செய்து இங்கு இணைப்புவேலைகள் செய்யப்படும், பஸ் லொறி போன்றவை இங்கே தயாரிப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. ஆனாலும் எஞ்சின் மற்றும் சில பாகங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்து இணைக்கப்படும்;

# யாழ்ப்பாணத்திற்கு மாற்றலாகி வரும் ஆசிரியர்கள் விபரம்

பிற இடங்களிலிருந்து யாழ்ப்பாணப் பகுதிக்கு இடமாற்றம் பெற்றுவரும் ஆசிரியர்கள் பட்டியலை ஆசிரியர் இடமாற்றசபை அறிவித்துள்ளது இடமாற்றம் பெற்றுவரும் ஆசிரியர்களுக்கு பிரயாணச்செலவு கொடுக்கப்பட மாட்டாது எனவும் அறிவித்துள்ளது. இடமாற்றம் பெற்றுவரும் ஆசிரியர்கள் விபரம் வருமாறு:-

திருமதி என். பி. றைருஊ வெள்ளவத்தைசி. சி. ரி. எம். எஸ். பாமன்கடை கொழும்பு-6. விக்னேஸ்வரா வித்தியாலயம் மீசாலை தெற்கு.

திருமதி ரி. செல்வகுருநாதன் புளுமென்டால் ஜி. ரி. எம். எஸ். கொழும்பு-13- ஆர். சி. ரி. எம். எஸ். நாவாந்துறை.

திருமதி ரட்ணசிங்கம் விவேகானந்தா மகாவித்தியாலயம்கொழும்பு-13 விக்னேஸ்வரா வித்தியாலயம் நல்லூர்,

திரு எஸ். செல்லப்பா விவேகாநந்த மகாவித்தியாலயம் கொழும்பு-13-வரணி மகாவித்தியாலயம்,

திருமதி ஏ. பி. பிலிப்ஸ் கொட்டாஞ்சேனை அரசாங்க தமிழ் பெண்பாடசாலை, பாரதி பாலிகா வித்தியாலயம் வண்ணார்பண்ணை.

செல்வி எஸ். கந்தையா ஒபயசேகரபுர ஜி. ரி. எம். எஸ். ராஜகிரிய- அராலி முருகமூர்த்தி வித்தியாலயம்,

திரு. எம். திருஞானசம்பந்தபிள்ளை இந்து கனிஷ்ட வித்தியாலயம் பம்பலப்பிட்டி, வேலணை நாகராசா வித்தியாலயம்.

செல்வி இ. அந்தோனிப்பிள்ளை புனித ஆன். பாடசாலை கொழும்பு-13, புலோலி ஆர். சி. ரி. எம். எஸ்.

திருமதி அந்தோனிராஜ் குட்செப்பேட் ஆர். சி. பாடசாலை கொட்டாஞ்சேனை கொழும்பு-13, கொக்குவில் மேற்கு சி சி ரி எம் எஸ்.

செல்விபி கந்தையா தெமட்டக்கொட ஜி. ரி. பாடசாலை கொழும்பு-9- தட்டாதெரு இந்து ரி. எம் எஸ்.

திரு ரி வேலாயுதம் உப்புக்குளம் எம். எம் ரி எம் எஸ். 200, பிக்கிரிஸ் ரோட்கொழும்பு-13, கைதடி மகாவித்தியாலயம்.

திரு எஸ். சுப்பிரமணியம் கொட்டாஞ்சேனை ஜி ரி எம் எஸ் கொழும்பு-13- ஏழாலை தெற்கு இந்து ரி எம். எஸ்.

திரு டீக. ஜெகதேவா மெதடிஸ் ரி. எம் எஸ் இட்சன் ரோட்கொழும்பு-13 ஆவரங்கால் எம் எம் ரி எம் எஸ்.

திரு எஸ் ஆர் பொன்னம்பலம் சென். லூசியஸ் மகாவித்தியாலயம் கொழும்பு-13-கைதடி மகாவிஷ்ணு வித்தியாலயம்.

திருமதி ஆர் சவுந்தரநாயகம் கொட்டாஞ்சேனை மத்திய மகாவித்தியாலயம் கொட்டாஞ்சேனை.- கதிறிஜா முஸ்லீம் பெண்கள் மகாவித்தியாலயம்-

திருமதி பி சந்திரசேகரி பம்பலப்பிட்டிய ஆர் சி ரி எம் எஸ், லொறிஸ் ரோப் கொழும்பு-4 நடேஸ்வராக் கல்லூரி

செல்வி எஸ் சின்னையா தீட்ரல் வித்தியாலயம் கொழும்பு-13- ஏழாலைவடக்கு ஏ எம் எம் ரி எஸ்

திருமதி கே சுப்பிரமணியம் தமிழ் பெண்கள் மகாவித்தியாலயம் பதுளை- சுதுமலை வடக்கு ரி எம் எஸ்.

திரு கே குமாரசிங்கம் தமிழ் மகாவித்தியாலயம் அப்புத்தளை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ரி எம் எஸ்.

திரு கே செல்வரத்தினம் ஸ்பிரிங்வலி ஜி ரி எம் எஸ். ஸ்பிரிங்வலி புங்குடுதீவு மகாவித்தியாலயம்.

திரு கே தேவராசன் அரசாங்க சிங்கள ரி எம் எஸ் நிக்கப்பொத்த- வேலணை கிழக்கு ஜி. ரி. எம் எஸ்.

திரு எஸ் குமாரசாமி தமிழ் மகாவித்தியாலயம் அப்புத்தளை- ஊர்காவற்றுறை மகாவித்தியாலயம்

திரு எம் சண்முகராசா சென். ஜோசேப் மகாவித்தியாலயம் பண்டாரவெல- யூனியன் கல்லூரி தெல்லிப்பளை

திரு பி சுப்பிரமணியம் கண்டிகெதர ரி எம் எஸ் கண்டிகெதர- சந்திரபுரம் ஸ்கந்தவரோதய வித்தியாலயம்

திரு எஸ் அருளம்பலம் கொஸ்லண்ட மகாவித்தியாலயம். கொஸ்லண்ட- றிபேக்கல்லூரி சாவகச்சேரி

திரு விகே செல்லையா அம்பிட்டியா மகாவித்தியாலயம் அம்பிட்டியா- அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரி.

திரு. கே. செல்வரத்தினம் ஸ்பிரிங்வலி ரி எம் எஸ் ஸ்பிரிங்வலி, புங்குடுதீவு மகாவித்தியாலயம்.

திரு. என். இரத்தினசிங்கம் சரஸ்வதி மகாவித்தியாலயம் பதுளை, குப்பிளான் விக்னேஸ்வரா.

திரு என். பொன்னையா சரஸ்வதி மகாவித்தியாலயம், பதுளை. மாதகல் சென்ற் ஜோசெப் மகாவித்தியாலயம்,

திரு வி கந்தசாமி பொகொட ஜி. எஸ் ரி எம். எஸ் லண்டாவெலா, கோண்டாவில் சி சி ரி எம் எஸ்.

திரு எம்பாலசுப்பிரமணியம் சரஸ்வதி கனிஷ்ட மகாவித்தியாலயம் பதுளை, புங்குடுதீவு மகாவித்தியாலயம்.

திரு வி சின்னத்துரை அப்புத்தளை ரி எம் எஸ் அப்புத்தளை, கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம்.

திரு கே சதாசிவம் சென் மேரி ரி எம் எஸ் பண்டாரவளை. ஊர்காவற்றுறை மத்திய ஏ எம் ரி எம் எஸ்

திரு என் வேலாயுதம் தெமட்டக்கொட ஜி ரி பாடசாலை கொழும்பு-0, கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்.

திரு எம் அரசரத்தினம் தம்பிலுவில் சரஸ்வதி வித்தியாலயம் திருக்கோவில் இணுவில் சைவப்பிரகாச வித்தியாலயம்.

திரு ஏ எஸ் செல்வநாயகம் முனீஸ்வரம் ஜி ரி எம் எஸ் சிலாபம், அச்சுவேலி சரஸ்வதி வித்திய சாலை

திரு ஏ சுப்பிரமணியம் முனீஸ்வரம் ஜி ரி எம் எஸ் சிலாபம், விக்ரோறியாக் கல்லூரி. (தொடரும்)


சக்தி வாய்ந்த
சர்வ பூச்சி நாசினி

பொலிடோல் ஈ-605




எல்லாக் கிருமிப் பீடைகளையும் இல்லாதொழித்து, பயிர்கள் செழிக்கவும் விளைச்சல் பெருகவும் செய்வது பொலிடோல்.

அழுக்கணவன், ஒட்டுண்ணி, பயிர்ப்பேன், பனிப்பூச்சி, இலையரிப் புழு போன்றவற்றை அது அடியோடு தொலைத்துவிடும்.

நெல், புகையிலை, உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், காய்கறி முதலிய எவ்வித பயிர்ச் செய்கையையும் பாதிக்கும் எல்லாவித பூச்சி, புழுக்கள், கிருமிகளையும் அழிக்கும் சக்தி வாய்ந்தது— பொலிடோல்.

100 சி. சி. (4 அவுன்ஸ்) விலை— ரூ. 5/50
250 சி. சி. (9 அவுன்ஸ்) விலை— ரூ. 11/-
1000 சி. சி. (35 அவுன்ஸ்) விலை— ரூ. 37/-

பொலிடோல் ஒரு பேயர் தயாரிப்பு. நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும்.

இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள்—
பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள்.



மூலப் பொருட் சத்து
உற்பத்தியாளர்:
பேயர்,
ஜெர்மனி

BAYER

இலங்கையில் தயாரிப்போர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.



பாவனையாளருக்கு

ஓர் அறிவித்தல்

பொலிடோல் ஈ 605

சக்தி வாய்ந்த சர்வ பூச்சி நாசினியான

பொலிடோல் ஈ 605

ஜெர்மனியைச் சேர்ந்த பேயர் நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் இலங்கையில் தயாரிக்கப்படுகிறது.

கடினமான தரக் கட்டுப்பாட்டின் கீழ் தயாரிக்கப்படும் பொலிடோல் ஈ 605 அலுமினியக் கொள்கலங்களில் தற்போது கிடைப்பினும், சில கட்டுப்பாடுகளின் விளைவாக, இனிமேல் இவற்றை இறக்குமதி செய்யமுடியாது. எனவே, கையிருப்பு முடிந்ததும்

100 சி. சி; 250 சி. சி; 1,000 சி. சி.
அலுமினியக் கொள்கலங்களுக்குப் பதிலாக,
4 அவுன்ஸ், 10 அவுன்ஸ், 16 அவுன்ஸ்

போத்தல்களில் இதை விற்பனை செய்யவிருக்கிறோம். இதனால், சிக்கன அளவில், குறைந்த விலையில், பாதுகாப்பான முறையில் பொலிடோல் ஈ 605 பாவனையாளருக்குக் கிடைக்கும்.

தரத்தில் எவ்வித மாற்றமும் இல்லாத பொலிடோல் ஈ 605, பேயர் வியாபாரச் சின்னத்துடனேயே விற்பனையாகும்.

துண்டுப்பிரசுரத்தில் காணும் பாதுகாப்பு விதிகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கவும்.

புதிய விலைகள் வருமாறு:

| | | |
|---|---|---|
| 4 அவுன்ஸ் போத்தல் | — | ரூ. 5/- |
| 10 அவுன்ஸ் போத்தல் | — | ரூ. 10/50 |
| 16 அவுன்ஸ் போத்தல் | — | ரூ. 16/50 |

எல்லாக் கிருமிப் பீடைகளையும் இல்லாதொழித்துப் பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள் - பொலிடோல் ஈ 605. நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி,
கொழும்பு—10

## இலங்கையின் மிளகாய்த் தேவை:

# 'வடபகுதியினுல் தனித்து நிறைவேற்றமுடியும்' -நிதிஅமைச்சர்

பருத்தித்துறை, செவ்.

'இலங்கை ஆண்டுதோறும் 24,000 தொன் நிறையான மிளகாய் இறக்குமதிசெய்கிறது. இதன்விளைவாக ரூபா 3.8கோடி பணம் நாட்டிற்கு விரயமாகிறது. இவ்வளவு மிளகாயும் வடபகுதியிலேயே உற்பத்திசெய்ய முடியும். மிளகாயில் இலங்கை தன்னிறைவுகாண வடபகுதி மட்டும் முடிகுமுடியும்'

'இவ்வாறு நிதியமைச்சர் டாக்டர் என்.எம்.பெரேரா பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாசாலையில்தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்தில் உரையாற்றுகையில் கூறினுர். உடுப்பிட்டி கிராமசபைத்தலைவர் திரு ஆர். ஆர். தர்மரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் டாக்டர் பெரேரா தொடர்ந்து பேசியதாவது:-

"புரட்சிமூலம் சோஷலிசத்தை அடைவதாயின் இன்று எமக்கு எவ்வித பிரச்னையுமே இருக்காது. ஆனுல் புரட்சிப் பாதையை விட்டு முதலாளித்துவ சமுதாயத்தின் கட்டுக்கோப்பை மக்களின் ஒத்துழைப்புடன் உடைப்பதே எமது நோக்கம் இது மிகக் கடினமான பணி. இதைப்படிப்படியாகவே செய்ய வேண்டும். இதன் முதற்படியாக நாம் உருவாக்கிய வரவு-செலவுத் திட்டம் குறிப்பிடக்கூடிய நன்மைகளை அளித்துள்ளது. பதுக்கப்பட்ட பணம் வெளிவந்ததுடன் கோடிக்கணக்கான பணம் வருமானவரியாகப் பெறப்பட்டுள்ளது. தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் வரப்போகும் வரவு-செலவுத்திட்டமூலம், வரிப்பளுவைப் பணக்காரர் மீது சுமத்தி, ஏழைகளுக்கு நிவாரணம்காண முயற்சிப்பேன். இம்முயற்சியில் சகல மக்களும், முற்போக்குச் சக்திகளும், அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கவேண்டும்.

'மக்களின் ஒத்துழைப்பும் கடின உழைப்புமின்றி நாட்டில் சோஷலிசத்தை கட்டி எழுப்ப முடியாது. வேலைவாய்ப்புத்தேடும் வாலிபர் இவ்வுண்மையை உணர்ந்து செயலாற்ற முயலவேண்டும்.

## வேலை நிறுத்தம் செய்யவில்லை

பருத்தித்துறை, செவ்

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை அதிபர் திரு. டட்லி குணசேகராவின் சேவை கைத்தொழில் அமைச்சின் உத்தரவின் பேரில் நிறுத்தப்பட்டதன் விளைவாக அங்கு நடைபெற்ற வெளிநடப்புப்பற்றி அரசாங்க கூட்டுத்தாபனத் தொழிற்சங்கத் தலைவர் திரு. எஸ். விக்கினேஸ்வரன் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"குறிப்பிட்ட தினம் பல தொழிலாளர் தனிப்பட்ட முறையில் வெளி நடப்புச் செய்தார்களென்றும், தொழிற் சங்க ரீதியில் எவ்வித நடவடிக்கையிலும் ஈடுபடவில்லையென்றும், நாலு மணித்தியாலங்களின் பின் அவர்கள் வேலைக்குத் திரும்பினுர்களென்றும் குறிப்பிட விரும்புகிறேன். திரு. டட்லி குணசேகராவின் பிரச்னை தொழிலாளர் பிரச்னையல்லவாகையால், தொழிற் சங்கங்கள் இதில் எதுவித பங்கும் கொள்ளவில்லையென்பது குறிப்பிடத்தக்கது."

## தமிழருக்கும்சிங்களவர்க்கும் சம சந்தர்ப்பமளிப்பது சோஷலிசம்

தமிழருக்கும் சிங்களவர்களுக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கக்கூடிய ஒரேபாதை சோஷலிஷ பாதையேயாகும். நீங்கள் சென்ற பாதையை விட்டு இனியாகுதல் இனமத பாகுபாடின்றி சோஷலிச பாதையை நோக்கிச் சென்ருல்தான் நாட்டின் பொருளாதாரம் பெருகவும் நாடு செழிக்கவும்வழிவரும்யாழ்ப்பாணப்பகுதியின் முன்னுள் லசசகட்சித் தலைவர் திரு: தர்மகுலசிங்கத்தின் மறைவு எங்கள் கட்சியின் பெரும் தலைவர்களில் ஒருவரையிழந்தபேரிழப்பாகும். மக்கள் அரசாங்கம் தேர்தலில் வெற்றிகொள்ளமுன்பே பிரசுரித்த தேர்தல் விஞ்ஞாபனம் மூலமே நாம்ஆட்சிக்கு வந்தோம் வடக்கேயுள்ள தமிழராயினுஞ்சரி தெற்கேயுள்ள சிங்களவராயினுஞ்சரி அவர்களைச் சமமாக மதித்தே அரசியல் நிர்ணய சபை புதிய அரசியல் சாசனத்தை ஆக்குகின்றது

(பரு. புலோலி நிருபர்)

## வேலை நிறுத்தம் முடிவுற்றது

பரந்தன், செவ்

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையைச் சேர்ந்த ஐந்து தொழிற் சங்கங்களின் கூட்டுக் கமிட்டியால் நடாத்தப்பட்ட வேலை நிறுத்தம் சம்பந்தமாக கைத்தொழில் அமைச்சர் தனது அலுவலகத்தில் மேற்படி குழு ஊழியர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடாத்தியதாக தொழிற்சங்கப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இதுபற்றி தொழிலாளர் குழுக் காரியதரிசி திரு. க. ச. வேலாயுதம் கூறுகையில் போது பேச்சுவார்த்தையில் அமைச்சர் மிகுந்த அவதானத்துடன் கவனித்து தனது தீர்மானத்தை மீண்டும் ஆராயப்போவதாக உறுதி கூறினுரென்றும், தங்கள் வேலை நிறுத்தத்தின்மூலம் என்றும் கிடைக்காத தொழிலாளர் ஐக்கியத்தைப் பெற்றுவிட்டதாகவும், இது ஒரு பெரிய வெற்றியென்றும் அவர் கூறினுர்.

# 'விவசாயக் கடனை அதிகரிப் பேன்'

கைதடி, செவ்.

'தற்போது விவசாயிகளுக்கு கடனுதவி போதாமலுள்ளது. ஏழைவிவசாயிகளுக்கு உதவு முகமாக தற்போதுள்ள விவசாயிகள் கடனை அதிகரித்துக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுப்பேன்

இவ்வாறு கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயை புதிய கட்டிடத்தைத்திறந்து வைத்து நிதி மந்திரி என். எம். பெரேராபேசும் போது கூறினுர்.

நாவற்குழி கிராமசபைத் தலைவர் திரு. எஸ். சடாச்சரம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் நிதி அமைச்சர் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:- இங்குள்ள விவசாயிகள் உப உணவுப் பயிர்களை உற்பத்தி செய்து நாட்டின்சுயதேவையைப் பூர்த்தி செய்ய உதவ வேண்டும்.

பேதங்காட்டாது எல்லா மாகாணத்தையும் போல வடக்குகிழக்குமாகாணத்திற்கும் உதவிகள் அளிப்பதே அரசாங்கத்தின் நோக்கம்'.

## புதிதாக் கம்பனிகளை பொறுப்பேற்க மாட்டோம்

கோட்டை, செவ்.

வர்த்தகக் கம்பனிகளை மேலும் புதிதாகத் தேசிய உடமையாக்குவதில் எமக்கு நாட்டமில்லை என்று ஸ்ரீலங்கா அரசாங்க வர்த்தகக் கூட்டுஸ்தாபனத் தலைவர் திரு. அசோகா ஜயசிங்கா கூறினுர்.

ஸ்ரீலங்கா அரசாங்க வர்த்தகக் கூட்டுஸ்தாபனம் பொறுப்பேற்ற கென்டரிசன் வர்த்தகக் கம்பனி பற்றிக் கூறுகையில் அக்கம்பனியின் வர்த்தகத்தை நாம் பொறுப்பேற்கவில்லை. கட்டிடங்களையே பொறுப் பேற்ருேம். இக்காரணத்திஞல் அக்கம்பனியில் வேலை செய்தவர்களை நாம் எடுத்துக் கொள்ள முடியவில்லை.

ஸ்ரீலங்கா வர்த்தகக்கூட்டுஸ்தாபனத்தில் ஒரு பகுதி வேலைகள் ஆரம்பமாகிவிட்டன. விரைவில் அதன் நடவடிக்கைகள் விசாரிக்கப்படும் என்ருர்.

## புதிய பரீட்சைக் கமிஷனர் குணசேகரா?

கோட்டை, செவ்வாய்

புதிய பரீட்சைக் கமிஷனராகத் திரு. சந்திரா குணசேகரா நியமிக்கப்படலாம்எனக் கூறப்படுகின்றது.

தற்போதுள்ள பரீட்சைக் கமிஷனர் கலாநிதி கே. ரி. டபிள்யு. சுமணசூரியாவின் பதவிக்காலம் ஏப்ரல் மாதத்துடன் முடிவடைகின்றது. ஆனுல் கலாநிதி சுமணசூரியா ஏப்ரலுக்கு முன்னரே ஓய்வுபெற்றுச் செல்லலாம் எனத்தெரிகின்றது.

திரு. சந்திரா குணசேகரா கல்வி அமைச்சின் உதவிக் காரியதரிசியாகவும், ஆசிரியர் இடமாற்ற சபைத் தலைவராகவும் தற்போது கடமையாற்றுகின்ருர்.

## மகஜர்

பரந்தன், செவ்வாய்

பரந்தன் ரசாயன கூட்டுத்தாபனத் தலைவர் பதவியிலிருந்து திரு. டட்லி குணசேகர நீக்கப்படுவதை நிறுத்திவைக்கும்படியும், குறைந்தது ஒருவருட காலத்துக்காவது அவரது சேவையை நீடிக்கும்படியும் கோரி, மக்கள் தெரிவுக் கமிட்டியின் தலைவர் என். ராமநாதன கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி அமைச்சருக்கு மகஜர் அனுப்பியிருக்கிருர்.

திரு. டட்லி குணசேகராவின் சேவைகளை அவர் குறிப்பிட்டிருப்பதுடன், அவர் செல்வதால் புதிதாகத் தொடங்கப்பட்ட பணிகள் பாதிக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சரை ஒருமுறை கூட்டுத்தாபனத்துக்கு வருகைதந்து நிலைமையை ஆராய்ந்து நேரில் அறியும்படியும் அவர் கோரியுள்ளார்.

## இன்றைய பலன்

தை மாதம் 14-ந் திகதி

(27-1-71)

மேஷம்- நல்லதைச் செய்வீர்கள் நலன்பெருகும். பிரமுகர்கள் உங்களைத் தேடிவருவார்கள் சமூகத்தில் மதிப்பு உயரும்.

ரிஷபம்- கலைஉலகம் சம்பந்தப்பட்டவர்களுக்கு புகழ்பரவும். வாழ்க்கையில் வசந்தம் நிலவும். இன்று மகிழ்ச்சிகரமான தினம்.

மிதுனம்- கௌரவத்தைப் பாதிக்கக்கூடிய சம்பவம் இடம்பெறலாம். தூற்றல் கணை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர்.

கடகம்- அரும்பிய காதல் இன்று கரும்புபோல் சுவைக்கும் பாரீர். விரும்பிய எண்ணம்போல் நல்லவை நடக்கும் காணீர்.

சிம்மம்- எக்கருமத்தையும் எண்ணித் துணிக. அவசரப்போக்கினுல் அருமையான சந்தர்ப்பத்தை கோட்டைவிடக்கூடும்.

கன்னி- பெரியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும், தெய்வத்தின் அருளும் உண்டு. இலட்சியப்பாதையில் புதிய முன்னேற்றம் காணப்படும்.

துலாம்- வித்தையில் வெற்றிகாணும். வேண்டியது கிடைக்கும், பொது மக்கள் தொடர்புடன் புகழ்வந்து சேரும்.

விருட்சிகம்- வரவில் உயர்வு காணும். வாழ்க்கையில் முன்னேற்றம் தென்படும். அயலவர்களின் வாழ்த்தும் அவசியம்கிடைக்கும்.

தனுசு- தன்பத்தின் ரேகைகள் நிழலாட்டம் போடும். துணைவரின் உடல் நலம் கெடும். பணமும் பெருமளவில் செலவாகும்.

மகரம்- செய்தொழிலில் தடுமாற்றநிலை தென்படும். வேண்டிய ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடும், மனத்திடம் வேண்டும்.

கும்பம்- பேச்சுவன்மையினுல் பெரும் புகழ்சேரும். பெரியோர்களும் ஆசி கூறுவர். அரசியல்வாதிகளின் செல்வாக்கைப் பெறுவர்

மீனம்- குருவின் ஆசியுடன் குறிக்கோளும் வெற்றிகாணும். குன்றென நிமிர்ந்து நிற்பீர். குவிந்திடும் புகழும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன் 27—1—71

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 இசைவேளை, 8-15 இளமையகீதங்கள்,

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர்.

இரவு6-15இசைப்பயிற்சி, 7-00 இசைநிகழ்ச்சி, 7-15 பாட்டு, 7-45 செய்திச்சுருள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 நாதஸ்வரம், 10-30 செய்தித்தொகுப்பு.

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், புதன்

முல்லைத்தீவு மகாவித்தியாலய உதவி அதிபர் வித்துவான் இ. திருநாவுக்கரசு இம்மமாதம் 20-ந் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரிக்கு 2-ந் தர விசேடப் பதவியுடன் இடமாற்றம் பெற்றுள்ளார். இவர் வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் முன்னர் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றியவர்.

0 0 0

சுழிபுரம், செவ்வாய்

14 ஆண்டுகளாக வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி கலைப்பிரிவு வரலாற்று ஆசிரியராகக்கடமையாற்றி வந்த திரு. என். திருநீலகண்டசிவம் இம்மாதம் தொடக்கம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

சங்கானை, செவ்வாய்

சங்கானை அரசினர் ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய அப்போதிக்கரி திரு. கே. பாலசுப்பிரமணியம் அடுத்த மாதம் 1-ந் திகதியிலிருந்து கண்டிக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். அன்னரின் இடமாற்றத்தை ஒட்டி சங்கானைப் பொதுமக்களாலும் ஊழியர்களாலும் பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது. அப்போதிக்கரி திரு. எஸ். நடராசா தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் திருவாளர்கள் சு. நடேசன், சி. சிவராசா, ப. சபை உறுப்பினர் உட்படப் பலர் அன்னுரின் சேவை நலம் பற்றி பேசினர்.

## மகாகும்பாபிஷேகம்

சுழிபுரம், செவ்.

பொன்னலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலய ஸ்ரீ சதுரங்க அனந்தசயனப் பெருமாள் நூதனப் பிரதிஷ்டை மகாகும்பாபிஷேக வைபவம் இம்மாதம் 31ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவிருக்கின்றது. இன்று புதன்கிழமை தொடக்கம் கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு வியாழன், வெள்ளி, சனி ஆகிய மூன்று தினங்களும் நடைபெறும். சிவஸ்ரீ ச. சுப்பையாக்குருக்களின் முயற்சியால் பெரியசாமி ஸ்தபதியாரால், உருவாக்கப்பெற்ற அனந்தசயன உருவத் திருமேனி கடந்த ஆண்டு ஊர்வலமாகப் பொன்னலைக்கு கொண்டு வரப்பட்டது. கும்பாபிசேக வைபவத்தை சிவஸ்ரீ க. சுப்பிரமணியக்குருக்கள் நிறைவேற்றிவைப்பார்.

## சபாநாயகர் யாழ். வருவார்

மாவிட்டபுரம், செவ்வாய்

வலி-வடக்குக் காரியாதிகாரி பிரிவில் சிறந்த முறையில் சுதந்திரதினவிழா நடத்தப்பட இருக்கிறது. இவ்விழாவில் பிரதம விருந்தினராக மக்கள் அரசு சபாநாயகர் திரு. ஸ்ரான்லி திலகரத்தின கலந்து கொள்வாரெனத் தெரிகிறது.

அளவெட்டி அருணோதயா கல்லூரியில் நடைபெற உள்ள இவ்விழாவில் காலையில் மரதன், சைக்கிள் ஓட்டப்போட்டிகளும் மாலையில் விளையாட்டுப்போட்டிகளும், பாடசாலைக் கிடையிலான மெய்வல்லுனர் போட்டிகளும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்படுகிறது.

இவ்விழாவுக்கான ஏற்பாடுகளை வலி-வடக்கு காரியாதிகாரி பி. எல். பற்றிக்ஸ், விளையாட்டு உத்தியோகத்தர்களான திரு. கே. சந்தசாமி, திரு. பி. முருகையா ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

# அரிசி கூப்பனை அரசாங்கம் விலை கொடுத்து வாங்கும்

## நிதி அமைச்சர் தகவல்

யாழ்ப்பாணம், செவ்

"அரிசி கூப்பன்புத்தகங்களை அரசாங்கம் மக்களிடமிருந்து விலை கொடுத்து வாங்கத் தீர்மானித்துள்ளது. கூப்பன் புத்தகங்களுக்குரிய விலையை நிர்ணயிப்பதற்கான பேச்சு வார்த்தை தற்பொழுது நடைபெற்றுவருகிறது. இத்திட்டம் அமுலுக்கு வந்ததும், மக்கள் அரிசி கூப்பன் புத்தகங்களை அரசாங்கத்திற்கு விற்கலாம்"

யாழ். நகர மண்டபத்தில் நேற்று "வரவு செலவுத் திட்டம்" பற்றி நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா உரை நிகழ்த்துகையில் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

நிதி அமைச்சர் மேலும் கூறியதாவது:-

விரைவில் இரண்டு அரிசி கூப்பன்கள் வழங்கப்படவிருக்கின்றன. இலவச அரிசிக்கு ஒரு கூப்பன். பணம் கொடுத்து வாங்கும் அரிசிக்கு மற்றொரு கூப்பன். இரு கூப்பன்களும் வெவ்வேறு நிறங்களில் இருக்கும். பணம் கொடுத்து வாங்கும் கூப்பனை, மக்கள் அரசாங்கத்திற்கு விற்கலாம். இதற்கான திட்டம் தயாராகிவருகிறது. சிலர் இலவச அரிசியை மட்டும் வாங்கிவிட்டு, இரண்டாவது கொத்து அரிசியை வாங்காமல்விடுகிறார்கள். இதனாலேயே இத்திட்டம் உருவாக்கப்பட்டது. இதன்மூலம், அந்நிய செலவாணியை சேமிக்கலாம் என்பது என் கருத்து



### சங்கானை பஸ் நிலையம்

சங்கானை, செவ்.

நீண்டகாலமாக கிடங்குகளும் பள்ளங்களுமாக நீர் தேங்கியபடி காட்சிஅளித்துக் கொண்டிருந்தசங்கானை பஸ் நிலையம் அண்மையில் பட்டினசபையினரால் திருத்தப்பட்டது.

—

"தமிழ் காங்கிரஸ்

## அரசுடன் இணைவதுபற்றி தீர்மானிக்கும்

யாழ்ப்பாணம், செவ்

"ஐக்கிய முன்னணி அரசாங்கத்துடன் நான்காவது கட்சியாகச் சேருவதற்கு, தமிழ் காங்கிரஸ் ஆட்சி மன்ற குழு தீர்மானித்துவிட்டது. தமிழ் காங்கிரஸ் தலைவர் இலங்கை திரும்பியதும், அவரிடம் இம்முடிவைத் தெரிவிப்போம் அவரின் சம்மதத்தோடுதான் அரசாங்கத்தோடு சேருவோம்."

தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணி செயலாளரும் கிளிநொச்சி எம். பி.யுமான திரு. வீ. ஆனந்தசங்கரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த தேர்தலில் வடமாகாணத்தில் தமிழ் காங்கிரஸிற்கு வாக்களித்த சுமார் 1 லட்சத்து 15 ஆயிரம் மக்களும் இம்முடிவை வரவேற்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்குண்டு என்றும் அவர் கூறினார்.

—

### ஜி. ஜி. வேலூர் ஆஸ்பத்திரியில்

சென்னை, ஜன. 25

தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு ஜி ஜி பொன்னம்பலம், சுகவீனம் காரணமாக வேலூர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். தமிழ்நாட்டில் தலயாத்திரையை மேற்கொண்டிருந்த திரு பொன்னம்பலம் இம்மாத இறுதியில், மலேயா செல்லவிருந்தார்.

......

### மேயர் மறுப்பு

யாழ்ப்பாணம், செவ்

சுப்ரீம்கோர்ட்டு தீர்ப்பின்படி திரு ஏ ஜி இராஜசூரியர் யாழ். மாநகரசபை உறுப்பினர் பதவியை இழந்துள்ளதால், அவரைமற்றும் மாநகரசபை உறுப்பினர்களுடன் நான் மகாதேசாதிபதி திரு வில்லியம் கோபல்லாவிற்கு அறிமுகம் செய்து வைக்கவில்லையென்று யாழ்ப்பாணம் மேயர் திரு ரி எஸ் துரைராஜா தெரிவித்துள்ளார்.

காரைநகர் தெற்கு

### கி. ச. தலைவர், உபதலைவர் தெரிவு

காரைநகர், திங்கள்

காரைநகர் தெற்கு கிராம சபைத்தலைவராக திரு வே சண்முகம் தெரிவு செய்யப்பட்டார்.

உபதலைவராக திரு கே வீரகத்திப்பிள்ளை தெரிவு செய்யப்பட்டார்.

திரு சண்முகம் இளைப்பாறிய வித்தியாலய அதிபராவர். உபதலைவராகத்தெரிவு செய்யப்பட்டுள்ள திரு கே வீரகத்திப்பிள்ளை நீண்டகாலமாக பத்திரிகை செய்தி நிருபராகப் பணிபுரிபவர். இவர் தமது வட்டாரத்தின் முன்னேற்ற காரியங்களில் பல ஆண்டுகளாக ஈடுபட்டு வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இருவருமே புதிதாகத் தெரிவு செய்யப்பட்டவர்களாவர்.

—

### இலங்கையில் கனடா பிரதமர்

கொழும்பு, திங்கள்

கனடாப் பிரதமர் திரு ருடோ இன்று இலங்கைக்கு வருகை புரிந்துள்ளார்.

பண்டாரநாயக்காவிமான நிலையத்தில் கனடாபிரதமர் வந்திறங்கியபோது பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, அமைச்சர்கள் திரு பீலிக்ஸ் பண்டாரநாயக்கா, திரு லெஸ்லிகுணவர்த்தன ஆகியோர்கள் வரவேற்றனர்.

கனடா அரசாங்கம்செய்த உதவியை நினைவு கூருமுகமாக கொழும்பு-நீர்கொழும்பு வீதிக்கு கனடாநட்புறவு வீதி என்ற பெயர் சூட்டப்பட்ட வைபவத்தில் கனடாப் பிரதமர் திரு பியரட் ருடோவும் கலந்து கொண்டார்.

—

### உடுவிலில் கம்யூனிஸ்ட்கிளை

யாழ்ப்பாணம், புதன்

உடுவில் தொகுதி கம்யூனிஸ்ட் கட்சிக்கிளை அங்குரார்ப்பணக் கூட்டம் திரு. எஸ்- விஜயானந்தன் தலைமையில் நடைபெற்றது. திருவாளர்கள் எஸ். அருச்சுனன், எஸ். கே. துரைசிங்கம் ஆகியோர் உரையாற்றினர்.

உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் எஸ். விஜயானந்தன், அமைப்பாளர் எஸ். நடராசா, காரியதரிசி எஸ். அருச்சுனன், தனாதிகாரி எஸ். விவேகானந்தன்.

நிர்வாகசபை உறுப்பினர்களாக எஸ். கே. துரைசிங்கம், எஸ். சிலுவைராசா, எம். பொன்னுத்துரை, எம் கதிரவேலு, எஸ் தர்மலிங்கம், எஸ். மகாலிங்கம், கே. துரைசாமி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

— —

### ல. ச. க. மத்திய நிர்வாகக்குழு

யாழ்ப்பாணம், புதன்

கோப்பாய்த் தொகுதி சுதந்திரக் கட்சிப் பொதுக் கூட்டம் அமைப்பாளர் திரு ஜி வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்றது. கோப்பாய்த்தொகுதி அபிவிருத்தித்திட்டம் ஒன்றை தயாரித்ததுடன் அவைகளைக் கூடிய கெதியில் நடைமுறைக்குக் கொண்டு வரக் கூடியதாகசம்பந்தப்பட்ட அமைச்சுகளுடன் தொடர்பு கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பின்வருவோர் கோப்பாய்த்தொகுதி மத்திய நிர்வாகக்குழு உத்தியோகஸ்தர்களாகத் தெரியப்பட்டனர். தலைவர்: ஜி வைத்திலிங்கம், உபதலைவர்கள்: என் பொன்னுக்கோன், எஸ் இராசதுரை, பி சோமசுந்தரம், எஸ். நடராசா, செயலாளர். கே இரத்தின சபாபதிப்பிள்ளை, உபசெயலாளர்கள்: எம் சிவராசா, ஏ கந்தசாமி, எஸ் கந்தையா தனாதிகாரி கே தர்மலிங்கம் மற்றும் நிர்வாக உறுப்பினர்களாக 5பேர்தெரிவு செய்யப்பட்டனர்.

### ஒரு துப்பாக்கிச் சூட்டுக்கு 3 வாலிபர்கள் பலி!

சம்மாந்துறை, செவ்.

ஒரு துப்பாக்கி வேட்டுக்கு 3 வாலிபர்கள் பலியான சம்பவம் ஒன்று சம்மாந்துறை சாலைத்தீவில் நடைபெற்றுள்ளது.

சோமசுந்தரராசையா, மொஹீதீன் பாவா ஆதம் பாவா, சரவணமுத்து பீட்டர் டொமினிக் ஆகிய மூவருமே துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்கள்.

ஒரு சாரதி ஒருவருக்கு வைத்த துப்பாக்கிக் குறி அங்கு நின்ற மற்றிருவரையும் பலி எடுத்ததாக விசாரணையில் தெரியவந்தது. இதுசம்பந்தமாக சாரதி ஒருவரைப் பொலிசார் தேடி வருகின்றனர்.

### மக்கள் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

அடிப்படைத் தீர்மானங்களை தமிழ் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்களாக இருக்கும் சில வழக்கறிஞர்கள் நேற்று முன் தினம் கூடி ஆராய்ந்ததாகவும் அப்போது அவை தமிழ் மக்களுக்கு பெரும் ஆபத்தாக இருப்பதாக காணக் கூடியதாகவிருப்பதாகவும் அவர் சொன்னார்.

அவர் மேலும் கூறியதாவது: அரசியல் நிர்ணயசபை முதலாவது தேசிய சபையாகும் என்று கூறப்பட்டுள்ளது அதுமுழுதும்ஜனநாயக சுதந்திரத்திற்கு மாறான கோட்பாடு ஏனெனில் அரசியல் நிர்ணயசபையில் தீர்மானிக்கப்படும், அரசியல் திட்டம், மக்களால் ஏற்றுக் கொள்ளப்படுகிறதா இல்லையா என்பதை அத்திட்டம் பிரயோகிக்கப்படும் மூலமாவது அறியமுடியாமலிருக்கும்

70-ம் ஆண்டு 5 வருடத்திற்கு பதவிவகிக்க தெரியப்பட்ட எம் பிக்களே குறைந்தது 7 வருடம் முதல் கூடியது 10வருடம்வரை தேசிய சபையில் இடம்பெறுவார்கள் என்றுகூறப்பட்டுள்ளது 10 வருடகாலத்திற்கு பிரஜைகளுக்கு வாக்களிக்கும் உரிமைஇதனால் இல்லாமல் போகின்றது.

■ ஜனாதிபதியை தெரிவு செய்யும் உரிமை நேரடியாகவோ சுற்றுவழியாகவோ மக்களிடம் ஒப்படைக்கப் பட வேண்டும். இப்போதுள்ள அடிப்படை தீர்மானங்களில் பிரதமரே ஜனாதிபதியை நியமிப்பாரென்றும் ஜனாதிபதியே பிரதமரை நியமிப்பாரென்றும் கூறப்பட்டுள்ளது இதன் மூலம் சர்வ அரசியல் அதிகாரமும் இருவர் கையில் மாறி மாறி இருந்து கொண்டேயிருக்கும் பிரஜைகள் தமது வாக்குரிமையால் இதனை தடுக்கமுடியாத நிலையில் இருப்பார்கள்.

■ நீதிமன்றங்கள் தேசிய சபையின் கீழ் உருவாக்கத்திலோ செயலிலோ அடங்கியதாக தோற்றப்படுகிறது இது நீதிமன்றத்தின் சுதந்திரத்திற்கு முழுக்க மாறான ஒரு நடவடிக்கையாகும்.

■ பொருளுடமை என்கின்ற விஷயத்தில் தனி நபரின் பெருஞ்உரிமை சுதந்திரம் எவ்வளவோ பாதிக்க கூடியதாக இருக்கிறது

சட்டங்களை நீதிமன்றத்தில் சரியா பிழையா என்று தீர்மானிக்க முடியாமலிருப்பதால் தனியார் சுதந்திரம் பாதிக்கப்படும்.

தமிழரசு கட்சியுடன் சேர்ந்து தமிழ் காங்கிரஸ் திருத்தங்களை சமர்ப்பிக்குமா? என்று தான் கேட்டபோது அது பற்றிதமிழ்காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்று கூறினார்.

### மரவரி......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

பனம்பொருள் ஆராய்ச்சிக்குழுவில் சங்க உறுப்பினர்களும் முக்கிய அங்கத்துவம் வகிக்கக்கூடியதாக வகைசெய்தல்வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் அரசாங்க அலுவலகத்தில்நடைபெற்ற இப்பேட்டியின போது நியமன எம் பி திரு எம் சிசுப்பிரமணியம் அரசாங்க அதிபர் திருவிமல் அமரசேகரா, கலால் கமிஷனர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கள்இறக்கும் தொழிலாளர் சங்கத்தலைவர் திரு கே பூவிலிங்கம், உபதலைவர் திரு. ஆறுமுகம், நிர்வாகக் காரியதரிசி திரு எஸ் இராசையா உட்படப் பொதுச் சபை அங்கத்தவர்களும் கலந்துகொண்டனர்,

நிதிமந்திரி தமக்களிக்கப் பட்ட தேநீர் விருந்துபசாரத்துக்கு நன்றி தெரிவித்துப்பேசுகையில விரைவில் இக்கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக உறுதியளித்தார். தேநீர் விருந்து வைபவத்தில் சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சி முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர். (குவிம)

—

### யாழ் தொ.நு கல்லூரி இந்து மாணவர் மன்றம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ் தொழில் நுட்பக் கல்லூரி இந்துமாணவர் மன்றத்தின் அழகவாண்டுக்கான பொதுக்கூட்டம் நடைபெற்றபோது புதிய நிர்வாகிகள் தேர்தலில் தெரிவுசெய்யப்பட்டோர் விபரம் வருமாறு:

தலைவர் திரு. பாலேந்திரன், உபதலைவர் திரு பொ. ஜெயராசா, செயலாளர் திரு மா, க. சுப்பிரமணியம், உபசெயலாளர் செல்வி என். நாகேந்திரராணி, பொருளாளர் திரு. செ. ஜெகதீஸ்வரானந்தா.

செல்வி வனஜாம்பாள் விசுவநாதஐயரின் பக்திப் பாடலும் இடம்பெற்றது. (உடு.நி)

—

### யாருடைய கூப்பன்?

யாழ்ப்பாணம், புதன்

கொக்குவில் சந்தியில் உடும்பராய் தெற்கைச் சேர்ந்த எஸ் சிவபதி இரு கூப்பன்களை கண்டெடுத்து 'ஈழநாடு' அச்சகத்தில ஒப்படைத்துள்ளார். உரியவர்கள் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் அதாபலத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது